# மலர்ந்த ஜீவியம்

**ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்**

**Vol. IV** **Issue 3** **June 2014**

இம்மாத மலரில். . .

## பொருளடக்கம்

பக்கம்

இம்மாதச் செய்தி . . . . . . . . . . . . 2

**அன்னை இலக்கியம்**

பார்வைகள் . . . . . . . . . . . . . . 3

பெம்பர்லி நடத்திய டார்சி
எலிசபெத் திருமணம் . . . . . . . . . . 53

**ஜீவியத்தின் ஓசை**

*படைத்த*
*பெண்ணை போற்ற*
*முடியாதது*
*துர்அதிர்ஷ்டம்*

கதை கட்டுரைகளில் வரும் பெயர்கள்
யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

இம்மாதச் செய்தி

# அகிம்சை

# துறவியின் இல்லறம்.



அன்னை இலக்கியம்

## பார்வைகள்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

சமர்ப்பணன்

### 8. கரிகாலனின் பார்வை

எதை அடைய நினைக்கிறோமோ, எதைக் கடக்க நினைக்கிறோமோ அதைப் பற்றி தெளிவாக அறிய வேண்டும். அறியாத ஒன்றை அடையவோ, கடக்கவோ எவராலும் முடிவதில்லை. அதை அறிந்து கொள்ளாமல் நெருங்குவது அக்னி பிரவேசமாகும். இயற்கையின் இருபெரும் முரண்களை ஒன்றை ஒன்று அறிய வைத்து, அறிவதற்கு இனி எதுவுமில்லை என்றானபின் அவற்றை ஒன்றாக்கும் இயக்கம் காதல். காதலின் உயிராற்றல் ஒருவரை ஒருவர் முற்றாக அறிய இடைவிடாது முயல்வதில் உள்ளது.

யசோதா நான் அவளைப் புரிந்து கொள்ள சிறிய முயற்சிகூட எடுப்பதில்லை என்ற மனக்குறையோடு இக்கருத்தை கல்யாணமான புதிதில் என்னிடம் கூறினாள். புத்தமதத்தைப் பற்றி நிறைய வாசிப்பாள். அவளுக்கு என்ன தெரியும் என்பது எனக்குத் தெரியாது.

'நாம் காதலர்கள் இல்லையே. நமக்குத்தான் கல்யாணமாகிவிட்டதே?' என்றேன்.

அவள் முகம் வாடிவிட்டது.

அன்றிரவு ஒரு பொதுக் கூட்டத்தில் நான் பேச வேண்டியிருந்தது. அதற்கான குறிப்புகளை இனிமேல்தான் தயார் செய்ய வேண்டும். இந்த சமயத்தில் யசோதாவோடு எந்தப் பிரச்சனையும் உருவாவதை நான் விரும்பவில்லை. அவளைச் சமாதானப்படுத்தும் வகையில் பேசினேன். 'நீ நல்லவள் என்று எனக்குத் தெரியும். என்னைப் பற்றியும் நீ நிச்சயம் அப்படித்தான் நினைப்பாய். நம் குடும்ப வாழ்க்கை சந்தோஷமாக இருக்க இது போதாதா?'

'போதாது.' 'என் சமாதான முயற்சி அவளிடம் செல்லுபடி ஆகவில்லை.' 'குடும்பம் செழிப்பாக இருக்க வேண்டுமானால்

நம் மனங்கள், களையெடுத்து, நீர்பாய்ச்சி, ஆழ உழுத வயல்களை போல நெகிழ்ந்திருக்க வேண்டும். இல்லையென்றால் வறுமையும், வறட்சியும்தான் வாழ்க்கையில் இருக்கும். ரிஷ்யசிருங்கர் கதை தெரியாதா உங்களுக்கு?' என்றாள் யசோதா.

'அதையெல்லாம் வாசிக்க எனக்கேது நேரம்? நீ சொல். நான் கேட்டுக் கொள்கிறேன்' என்றேன்.

'தன்னை விட்டு மனைவி பிரிந்து போய்விட்டதால் விபாந்தக ரிஷிக்கு எல்லாப் பெண்கள் மீதும் வெறுப்பு வந்துவிட்டது. அங்க தேசத்து காட்டுக்குள் எவருமே இல்லாத தனியான இடத்தில் தன் ஒரே மகனான ரிஷ்யசிருங்கரை, பெண் என்றால் என்னவென்றே தெரிந்து கொள்ள முடியாதபடி வளர்த்து வந்தார். அப்படி வெளியே மறைப்பதால் என்ன பயன்? உள்ளே உள்ளது உரிய நேரத்தில் வெளிப்படத் துடிக்காதா? பெண்ணை அறிய வழியில்லாத ரிஷ்ய சிருங்கருக்கு மனம் வறண்டு விட்டது. அந்த வறட்சி அங்க தேசத்தில் வறட்சியாக மாறி பஞ்சம் வந்துவிட்டது. ஒரு ஞானியின் மூலம் பஞ்சத்திற்கான பரிகாரம் என்னவென்று அங்க தேசத்து அரசன் ரோமபாதன் தெரிந்து கொண்டான். அழகிய பெண்களை காட்டிற்குள் அனுப்பி வைத்தான். அவர்களோடு பழக ஆரம்பித்தபின் ரிஷ்யசிருங்கரின் அகவறட்சி மறைந்து அகசெழிப்பு வந்தது. நாட்டில் மழை பொழிந்து, பஞ்சம் மறைந்து, வளம் கொழித்தது' என்றாள் யசோதா.

'சரி, நானும் ரிஷ்யசிருங்கர் ஆகிவிடுகிறேன்' என்று யசோதாவின் கைகளைப் பற்றினேன்.

சிறு கோபத்தோடு என் கைகளை உதறிவிட்ட யசோதா, 'நான் என்ன சொல்லுகிறேன்? நீங்கள் என்ன செய்கிறீர்கள்?' என்றாள்.

'தப்புதான் தாயே. உன் கதையும் தப்புதான். பெரிய லட்சியவாதிக்குப் பெண்ணை விட்டுப் பிரிந்தால்தான் லட்சியம் நிறைவேறுகிறது. உன்னுடைய கடவுளான புத்தபகவானின் கதை என்ன சொல்கிறது? அவர் மனைவியை விட்டுப் பிரிந்து சென்றவுடன்தானே முக்தி கிடைத்தது?' என்றேன்.

'அடக் கடவுளே, அவருக்குக் கிடைத்தது மகா நிர்வாணம். முக்தி என்று சொல்லக் கூடாது' என்றாள்.



'எனக்கு எல்லாம் ஒன்றுதான்' என்றேன்.

'அவர் பெண்ணைப் பிரிந்தவுடன் ஞானம் பெற்று விடவில்லை. இருபத்தி ஒன்பதாவது வயதில் அரண்மனையை விட்டுப் போனார். ஆறு வருடங்கள் எங்கெல்லாமோ அலைந்தும் ஞானம் கிடைக்கவில்லை. முப்பத்தைந்தாவது வயதில் உடல் நலிவாலும், பசியாலும் படுத்த படுக்கை ஆகிவிட்டார். அப்போது சுஜாதா என்ற இளம்பெண் அன்னையைப் போல அவருக்கு அன்னமிட்டு பணிவிடை செய்தாள். அதன்பின் ஐம்பது நாட்களுக்குள் அவருக்கு போதி மரத்தடியில் ஞானசித்தி கிடைத்தது. தெரிந்து கொள்ளுங்கள். உங்களுக்கு பெண்ணின் பெருமை பற்றி ஒன்றுமே தெரியவில்லை. எதுவுமே தெரியவில்லை. நான் தினமும் புத்தர் பற்றி உங்களுக்கு சொல்லித் தருகிறேன்' என்றாள் யசோதா.

'சரி, சரி. இன்றைய சொற்பொழிவிற்காக நான் நிறைய வாசிக்க வேண்டியிருக்கிறது. நாளையிலிருந்து உன்னைப் புரிந்து கொள்ள முயற்சி செய்கிறேன்' என்றேன்.

பதில் பேசாமல் அறையைவிட்டு வெளியே போனவள் சூடாக காபி போட்டுத் தந்தாள். என் வாசிப்பிற்கு அந்த காபி உயிர் தந்தது.

எனக்கு யசோதாவை மிகவும் பிடிக்கும். அவளுக்குத்தான் நாளாக நாளாக என் மீது வெறுப்பு வந்துவிட்டது.

ஒரு நாள், 'எனக்கு திருச்சியில் வேலை கிடைத்திருக்கிறது. சிறிது நாட்கள் அங்கே போய் இருக்கப் போகிறேன்' என்று அறிவித்தாள். நான் 'என்னை விட்டுப் போகாதே' என்றேன். கேட்கவில்லை. திருச்சிக்கு சென்ற சில நாட்களிலேயே எனக்கு வழக்கறிஞர் மூலம் விவாகரத்து முன்னறிவிப்பை அனுப்பி வைத்தாள். என்னை சந்திக்கவோ, பேசவோ மறுத்து விட்டாள். வழக்கு விவரம் சுற்றி இருப்பவர்கள் எல்லோருக்கும் தெரிந்திருக்கும் என்றுதான் நினைக்கிறேன். பண்புள்ளவர்கள் என்பதால் ஒருவரும் அதைப் பற்றி கேட்பதில்லை. அதனால் அதை யாருக்கும் தெரியாத ரகசியம் என்று அவள் நினைத்துக் கொண்டிருக்கிறாள்.

யசோதா மீது எத்தனை பிரியம் வைத்திருக்கிறேன். என் கைப்பணத்திலிருந்து சமூகசேவைக்கு பணம் ஏராளமாகத்

தேவைப்பட்டது என்றாலும் வீட்டு செலவிற்கு ஒரு போதும் குறை வைத்ததே இல்லை. என் வருமானத்திற்கும் மீறி அதிகமாகவே வீட்டு உபயோகப் பொருட்களும், புடவைகளும், நகைகளும் வாங்கித் தந்திருக்கிறேன். இனியும் வாங்கித் தருவேன். வேறென்ன வேண்டும் யசோதாவிற்கு?

இன்னும் சில நாட்களில் விவாகரத்து கிடைத்து விடும். அவள் நினைவுகளோடு நான் முழுநேர சமூகசேவை செய்ய வேண்டியது-தான்.

வம்சியோடு பேசிக் கொண்டிருந்தபோது அவனது புலன்களின் மொத்த கவனமும் மண்டப வாயிலில் குவிந்திருப்பதை உணர்ந்தேன். அதற்கான காரணம் சகோதரி வாத்சல்யா என்பதை அவர் மண்டபத்திற்குள் நுழையும்போது அறிந்தேன். மண்டபத்-திற்குள் நுழைந்த கணமே அவர் கண்கள் வம்சியைக் கண்டதற்கும், அக்கண்களின் வழியே வழிந்தோடிய மொழியற்ற காதலுக்கும் நான் காதலர்களறியா சாட்சியாக இருந்தேன். வம்சி நான் பேசுவதை கவனிப்பது போல் பாவனை செய்தானே தவிர அவனது மனம், ‘ஒதுங்கிக் கொள், அவள் என்னருகே வருகிறாள்’ என்று கூறியது போல எனக்குத் தோன்றியது.

வம்சியை நோக்கி இரண்டடி எடுத்து வைத்தவர் சற்று தயங்கி விட்டு பின் அபிராம பித்தரை நோக்கி நடந்தார். வம்சியின் அருகே நான் நின்று கொண்டிருந்தது அவருக்குப் பிடிக்க-வில்லையா? அப்படி இருக்காது. என்னோடு பேசும் சந்தோஷத்தை வம்சி இழக்கக் கூடாது என்பதால் சகோதரி வாத்சல்யா எங்களருகே வந்திருக்க மாட்டார். அவரது நல்ல மனதை வம்சி என்றுதான் தெரிந்து கொள்வானோ! அப்பெண்ணின் மனம் எனக்குத் தெரியும். இத்தனை வருடங்கள் நெருங்கிப் பழகியும் சகோதரி வாத்சல்யாவை வம்சி அறிந்து கொள்ளவே இல்லை. அதற்கான எந்த முயற்சியும் எடுக்கவே இல்லை.

பல தத்துவ புத்தகங்களை படித்து, தெளிவாக அவற்றைப் பற்றி பேசக்கூடியவனும், பிரச்சனை தீர வழி கேட்டு வருபவர்-களுக்கு தெளிவான தீர்வைத் தருபவனுமான வம்சியின் முகத்தில் எதிர்பார்ப்பு நிறைவேறாததால் உண்டான ஏமாற்றமும், அதனால் எழுந்த வெறுப்பும் அப்பட்டமாகத் தெரிந்தன. அவன் உணர்ச்சிகளை



மறைக்கும் மனநிலையில் இல்லை. ‘இதோ வருகிறேன்’ என்றவன் சடாரென்று கூட்டத்திற்கு இடையே நுழைந்து மண்டபத்தின் முதல் மாடிக்கு சென்று விட்டான்.

மண்டபத்தின் மாடியைப் பார்த்தேன். ஏதோ ஒரு மூலையில் ஒளிந்து கொண்டு வம்சி சகோதரி வாத்சல்யாவை பார்த்துக் கொண்டிருப்பான்.

பல வருடங்களுக்கு முன்னால் பள்ளியில் என்னோடு படித்தவர்கள் வம்சியும், சந்துருவும். பவித்திரன் வேறு பள்ளிக்கூடம். அந்த வயதில் எத்தனை நட்புடன் மற்றவர்கள் பழகினாலும், அவர்களை என் வீட்டிற்கு அழைக்க மனம் வந்ததில்லை. நானிருக்கும் வீட்டைப் பார்த்த பின்னும் நட்புறவு தொடருமா என்ற சந்தேகம் எனக்கிருந்தது. சேரியில் கொசுக்கள் குடியிருக்கும் தேங்கிய சாக்கடை ஓரமாக மனிதர்கள் பன்றி-களோடும், நாய்களோடும் படுத்துறங்கும் சுற்றுச் சுவரில்லாத சிறு ஓலைக் கொட்டகையை குடிசை என்று சொல்ல கூட நெஞ்சுரம் வேண்டும். வீடு என்று சொல்வது அதிகபிரசங்கித்தனத்தின் உச்சகட்டம்.

கல்லூரியில் படிக்கும்போது ஒரு நாளிரவு எங்கள் குடும்ப கொட்டகை, அதுதான் வீடு, எரிந்து போய்விட்டது. பழகிப் போன விஷயம் என்பதால் அதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. ஆனால், விஷயம் எப்படியோ வம்சிக்கு தெரிந்துவிட, அவனும் சந்துருவும், பவித்திரனும் உடனே சேரிக்கு வந்துவிட்டார்கள். கதாசிரியர்கள் மூலம் இலக்கியத்திலும், நண்பர்கள் மூலம் வாழ்விலும் சேரிகளை நன்றாக அறிந்திருந்த சந்துருவிற்கு நானிருந்த சேரி அதிர்ச்சியைத் தரவில்லை. ஆனால் வம்சியின் முகத்தில் அருவருப்பு, ஆச்சரியம், வருத்தம் போன்ற பல உணர்வுகள் தோன்றி மறைந்த வண்ணமிருந்தன. பவித்திரன் ஏதோ தன் வீடே எரிந்துவிட்டது போல கவலையோடு இருந்தான்.

வானமே கூரையாகவும், சூரியனே விளக்காகவும் மாறிவிட்ட வீட்டில் பாதி எரிந்து போயிருந்த குச்சிகளின் நடுவே கிடந்த சாம்பல் மேடு ஒன்றில் கைகுட்டைகளை விரித்து அமர்ந்து கொண்டு பேசினோம். இருபுறமும் செங்கல்வீடுகள் இருந்தன.

எதிர்வீடு புதிய கல்சுவரும், ஓடுவேய்ந்த கூரையும் கொண்டிருந்தது. வாழைமரம் வாசலில் கட்டப்பட்டிருந்தது,

‘பெண்கள் எப்படி இதில் வசிப்பார்கள்?’ என்று கேட்டான் வம்சி.

‘சாக்குபைகளைச் சுவர்களாக நினைத்துக் கொள்ள முடியாதா?’ என்றேன்.

‘அபார மூளை, அபார மூளை’ என்றான் சந்துரு.

‘இன்னும் சில நாட்களுக்கு அரசாங்கப் பள்ளிக்கூடம்தான் எங்கள் வீடு. சொந்தவீட்டைவிட அது வசதியாகத்தான் இருக்கிறது’ என்றேன்.

‘எல்லோரும் சுகந்தானே?’ என்று கேட்டான் சந்துரு.

‘மரக்கதவோ, கல்சுவரோ இல்லாத வீடு என்பதால் யாருக்கும் ஒரு ஆபத்துமில்லை’ என்றேன்.

‘மேலே கூரை எரியும்போது குளிருக்கு சுகமாக இருந்திருக்குமே’ என்றான் சந்துரு. அவன் எப்போதும் அப்படித்தான் பேசுவான்.

‘ஆமாம். குளிர்காலத்தில் கொட்டகை எரிவது கதகதப்பாக சுகமாக இருக்கும். வெயில்காலத்தில்தான் கஷ்டமாக இருக்கும்’ என்று கூறி சிரித்தேன்.

எங்கள் நகைச்சுவை வம்சிக்கு அதிர்ச்சியைத் தந்தது. ‘என்னடா, இந்த கொடுமையான விஷயத்தைப் பற்றி இப்படி சாதாரணமாக பேசிக் கொள்கிறீர்கள்?’ என்று கோபித்துக் கொண்டான்.

‘சந்துரு இலக்கியவாதி. எதையும் கதையாக மாற்றிக் கொண்டு எப்போதும் சமநிலை நோக்கோடு இருப்பான். நான் எதற்கும் வக்கில்லாதவன். துன்பத்தை நகைச்சுவையாக மாற்றிக் கொண்டு சமநிலை நோக்கோடுதான் இருந்தாக வேண்டும்’ என்றேன்.

‘வம்சி, நகைச்சுவை உணர்வு இருந்துவிட்டால் கடல் நீரின் உப்பை மனதிற்குள் சர்க்கரையாக மாற்றி விடலாம்’ என்றான் சந்துரு.

‘பயனற்ற பேச்சு. கரிகாலா, நடைமுறையில் இதையெல்லாம் மாற்ற நீ என்ன செய்யப் போகிறாய்?’ என்று கேட்டான் வம்சி.



‘கம்ப்யூட்டர் தட்டச்சு படித்துக் கொண்டிருக்கிறேன். பரீட்சை முடிந்ததும் ஏதாவது வேலைக்குப் போக வேண்டும். பி.ஏ. படிப்பிற்கு என்ன வேலை கிடைக்கும்? பி.ஏ.விற்கும், சி.ஏ.-விற்கும் ஓரெழுத்துதான் வித்தியாசம். ஆனால், சம்பளத்தில் ஓராயிரம் மடங்கு வித்தியாசம் இருக்கிறது’ என்றேன்.

‘மேற்படிப்பு?’ என்றான் பவித்திரன்.

‘என்னைப் போன்றவர்களுக்கு வாழ்க்கைதான் மேற்படிப்பு’ என்றேன்.

‘நீ ஏன் அறிவியல் பாடம் எடுத்திருக்கக் கூடாது? மருத்துவ படிப்போ, பொறியியல் படிப்போ உனக்கு சாதிச் சலுகையால் எளிதாகக் கிடைத்திருக்குமே’ என்றான் வம்சி.

‘அதற்கெல்லாம் படிப்பில் ஆர்வம் வேண்டும்’ என்றான் சந்துரு.

‘மேலும் சாதி சான்றிதழ் வேண்டும். நம் நாட்டில்தான் எத்தனை தாழ்த்தப்பட்ட சாதிகள் உள்ளன. எத்தனை உப பிரிவுகள்! என் சாதி, பட்டியலிலேயே இல்லை. அதனால் எனக்கு எந்தச் சலுகையும் இல்லை. சாதி பட்டியல், சான்றிதழ் பற்றியெல்லாம் என் அப்பா சிந்திக்கக் கூடியவர் இல்லை. ‘நல்ல வாய்ப்புள்ள சாதி எதிலாவது சான்றிதழ் வாங்கித் தருகிறேன். ஆனால் செலவாகும்’ என்று இந்த தொகுதியின் சட்டமன்ற பிரதிநிதி சொல்லிவிட்டார். அவர் கேட்ட தொகையை சம்பாதிக்க என் அப்பா இரண்டு, மூன்று பிறவிகள் தொடர்ந்து வேலை பார்த்தாக வேண்டும். அதனால் அதை மறந்துவிட்டேன்’ என்றேன்.

‘உங்கள் பகுதியில் மனித நெரிசல் உள்ளதால், ஆபத்து என்றதும் எல்லோரும் உதவி செய்ய ஓடி வந்திருப்பார்கள், அதுதான் ஆறுதலான விஷயம்’ என்றான் பவித்திரன்.

சிரித்தான் சந்துரு, ‘எந்த இடத்திலும் மனிதன் சுயநலமானவன் தான். ‘பணக்காரனிடம் பணமிருக்கும், பண்பிருக்காது. ஏழையிடம் பண்பிருக்கும், பணமிருக்காது’ போன்ற கருத்துகள் சுவையான கற்பனைகள். பக்கத்து வீடுகள் குடிசைகள் என்றால், அந்த வீட்டுக்காரர்கள் ஓடி வந்து இவன் வீட்டு நெருப்பை அணைத்திருப்பார்கள்’ என்றான்.

‘அம்மாவிற்கும், பக்கத்து செங்கல்வீட்டுப் பெண்களுக்கும் எப்போதுமே பேச்சு வார்த்தை இல்லை. எதிர்வீட்டுக்காரர் சுவரும், ஓடும் வைத்து வீடு கட்டி நேற்று கிரகபிரவேசம் செய்தார். முறைப்படி கூப்பிடவில்லை என்று அவரோடும் அம்மாவிற்கு மனத்தாங்கல். பின் எப்படி எவரும் உதவ வருவார்கள்?’ என்றேன்.

‘முன்னையிட்ட தீ முப்புறத்திலே’ என்ற பட்டினத்தார் பாடல் வரியை சந்துரு சிரித்து கொண்டே சொன்னான்.

வம்சி சந்துருவை முறைக்க ‘அன்னையிட்ட தீ அடிவயிற்றிலே’ என்றேன்.

‘புரிந்தால் சரி’ என்றான் சந்துரு.

‘புரிந்தாலும் நம் குடும்பத்தினரை விட்டுவிட முடிகிறதா? வெட்கப்பட்டுக் கொண்டு அவர்களோடு வாழத்தானே வேண்டும்?’ என்றேன்.

‘சொந்த அம்மாவைப் பற்றி இப்படியெல்லாம் பேசக் கூடாது’ என்றான் வம்சி.

‘இன்று காலையில் ரசம் போன கண்ணாடியில் முகம் பார்த்த போது, என் அம்மாதான் தெரிந்தார். வெட்கப்படாமல் என்ன செய்வது?’ என்றேன் அலுப்புடன்.

‘உன் அம்மா மீது பிரியமில்லையா?’ என்று கேட்டான் வம்சி.

‘பிரியம்தான் பிரச்சனை. இப்போதைக்கு என் லட்சியம் என்ன தெரியுமா? என் அம்மாவிற்கும், தங்கைகளுக்கும் வயிறு நிறைய, மனம் நிறைய, தினமும் ஒரு வேளையாவது நல்ல சாப்பாடு போட வேண்டும். அவர்கள் கிழியாத சேலையும், ரவிக்கையும் அணிய வேண்டும். அது போதும் எனக்கு’ என்றேன்.

‘அது போதுமா?’ என்றான் வம்சி.

‘போதும்’ என்றேன்.

‘எல்லோரும் சாப்பிட்டீர்களா?’ என்று கேட்டான் பவித்திரன். நான் பதில் பேசாதிருந்தேன்.

பவித்திரனின் கண்களில் நீர் திரண்டது. ‘இரு வருகிறேன்’ என்று கூறிவிட்டு பவித்திரன் தன் சைக்கிளில் ஏறி எங்கோ வேகமாகக் கிளம்பினான்.



‘நானும் வருகிறேன்’ என்று வம்சி அவனோடு சேர்ந்து கொண்டான்.

‘எங்கே போகிறார்கள்?’ என்றேன்.

‘பவித்திரன் எங்கு போகிறான் என்று தெரியவில்லை. வம்சி வாத்சல்யாவிடம் பணம் வாங்கிக் கொண்டு வருவான் என்று நினைக்கிறேன்’’ என்றான் சந்துரு.

‘யாரது?’ என்று கேட்டேன்.

‘ஊருக்கே தெரிந்த விஷயம். உனக்குத் தெரியாதா! பெரிய இடத்துப் பெண். சிறிது நாட்களாக இவன் மீது அபாரமான பிரியத்தோடு பழகி வருகிறது’ என்றான் சந்துரு.

‘பிரியமாகப் பழகினால் உடனே கடன் வாங்குவதா!’ என்றேன்.

‘சேச்சே! வம்சி அப்படிப்பட்டவன் இல்லை. எப்போதும் தானமாகத்தான் வாங்கிக் கொள்கிறான்’ என்றான் சந்துரு.

‘இது என்ன வேடிக்கை!’ என்றேன்.

‘அது தருகிறது. இவன் பெறுகிறான். உனக்கும், எனக்கும் என்ன வந்தது? அதைவிடு. உன் வீடு எரிந்து போய்விட்டது என்ற செய்தி வந்ததும், பஞ்ச பாண்டவர்கள் தங்கியிருந்த அரக்கு மாளிகை எரிந்த போன மகாபாரத நிகழ்ச்சி நினைவிற்கு வந்தது’ என்று சுவாரசியமாக கதை சொல்ல ஆரம்பித்தான் சந்துரு.

ஒரு மணி நேரத்தில் பவித்திரனோடு ஆட்டோவில் வந்திறங்கினான் வம்சி. பவித்திரன் ஒரு சிறுபை நிறைய அரிசியும், மளிகை சாமான்களும் வாங்கி வந்திருந்தான். வம்சி தந்த காகித உறைக்குள் ரூபாய் கட்டு ஒன்று இருந்தது.

‘ஏது இவ்வளவு பணம்?’ என்று சந்துரு கேட்டான்.

‘பவித்திரன் சைக்கிளை விற்றான். நான் கைக்கடிகாரத்தை நல்ல விலைக்கு விற்று விட்டேன்’ என்றான் வம்சி.

‘சைக்கிள் அவனுடையது, விற்க அவனுக்கு உரிமை உண்டு. வாத்சல்யா கொடுத்த விலை உயர்ந்த வெளிநாட்டு கடிகாரத்தை நீ எப்படி விற்கலாம்? அதனிடம் சொன்னாயா?’ என்று சந்துரு கேட்டான்.

‘அவள் ஒன்றும் சொல்ல மாட்டாள். அதனால் அவளிடம் சொல்லவில்லை’ என்றான் வம்சி.

எனக்கு அப்பணத்தை தொடக் கூச்சமாக இருந்தது. ‘இருந்தாலும் அவர் என்ன நினைப்பாரோ? நட்பு எத்தனை நெருக்கமானது என்றாலும், உங்கள் இருவருக்கிடையில் நாங்கள் வருவது சரியாகாது. எதற்கும் அவரை நேரில் பார்த்து பணத்தைக் கொடுத்து மன்னிப்பு கேட்டுவிடு’ என்றேன்.

‘நேரில் பார்த்துவிட்டுத்தான் வருகிறேன். கடிகாரம் கட்டவில்லை என்பதை அவள் கவனிக்கவில்லை’ என்றான் வம்சி.

‘நிச்சயம் கவனித்திருக்கும். பெண்ணாயிற்றே. நாசூக்கான பெண் என்பதால் கேட்டிருக்காது’ என்றான் சந்துரு.

‘வாத்சல்யாவிடம் உன்னைப் பற்றி சொன்னேன். இன்னும் இரண்டு நாட்களுக்குள் மூங்கில் குச்சிகளும், சாக்குப்பைக்கு பதில் மரத்தட்டிகளும் வைத்து, உயரமாக கூரை போட்டு நல்ல வீடு தயாராகிவிடும். இன்று மாலைக்குள் வாத்சல்யா ஏற்பாடு செய்து விடுவாள். ஆடிட்டரிடம் பேசி உனக்கு பகுதிநேர வேலைக்கும் ஏற்பாடு செய்துவிடுவாள். பரீட்சை முடிந்தபின் அது முழுநேர வேலையாகிவிடும்’ என்றான் வம்சி.

இப்படிப்பட்ட மனித உறவுகளைவிட பெரிய செல்வம் என்ன இருக்க முடியும் என்று தோன்றியது. முகம் தெரியாத சகோதரி வாத்சல்யாவின் மீது அளவற்ற பிரியம் எழுந்தது. இன்றுவரை அது குறையவே இல்லை. அவரது கைராசியோ, என்னவோ, அதற்குப் பின் எங்கள் வீட்டில் எந்த அசம்பாவிதமும் நடக்கவே இல்லை.

வம்சி அவசரக்காரன். இன்னும் கொஞ்சம் யோசித்து செயல்பட்டிருக்கலாம். செலவோடு செலவாக செங்கல் வீடாக கட்ட ஏற்பாடு செய்திருக்கலாம். வேலை கிடைத்துவிட்டதால் மெல்ல, மெல்ல பணத்தை திருப்பிக் கொடுத்திருப்பேனே!

மீண்டும் சகோதரி வாத்சல்யா இருந்த திசையில் பார்த்தபோது அவர் பித்தருக்கும், பகுத்தறிவு சாருக்கும் அருகே அமர்ந்திருப்பது தெரிந்தது. நான் ஏதும் செய்யாத போதிலும் என்னுள் குற்ற



உணர்வு இருந்தது. வம்சி முதல் மாடியில் இருப்பதை சொல்ல நினைத்து அவரருகே சென்றேன்.

என்னைக் கண்டதும் மெய்யான முகமலர்ச்சியோடு எழுந்து நின்று கை குவித்த சகோதரி வாத்சல்யா, ‘அண்ணா, உட்காருங்கள்’ என்று தன்னெதிரே இருந்த நாற்காலியைக் காட்டினார்.

என்மீது பட்டு விடாதபடி, என்னைத் தீண்டி விடாதபடி பகுத்தறிவு சார் தன்னுடலை குறுக்கிக் கொண்டார். என் மனத்தில் ஆயிரமாண்டுகளாக அணையாமல் எரிந்து கொண்டிருக்கும் கோபம் வெளிப்படத் துடித்தது. அதற்கான சூழல் இதுவல்ல. வாயாவி மாமா என் வலக்கையை பற்றி குலுக்கினார். சாரின் முகத்தில் ஒரு கணம் அசூயை எழுந்து மறைந்தது.

‘மாடியில் சென்று அமருங்கள். மேடை நன்றாகத் தெரியும்’ என்று சகோதரி வாத்சல்யாவிடம் கூறினேன்.

‘பரவாயில்லை அண்ணா’ என்றவரது பார்வை ஒரு கணம் பின் வரிசையைத் தீண்டி ஏமாற்றத்துடன் மீண்டது.

‘சாதிகளை ஒழிக்கக் கூட்டங்களை போடுகிறாயாமே! நல்ல முயற்சி’ என்றார் பகுத்தறிவு சார்.

‘சாதிகளை ஒழிக்க நினைக்கவில்லை. அதைப்பற்றி மக்களுக்கு புரிய வைக்க முயற்சி செய்கிறேன்’ என்றேன்.

‘சாதி என்றால் சாதிதான். அதில் புரிய என்ன இருக்கிறது?’ என்றார் பகுத்தறிவு சார்.

‘மனிதன் உருவாக்கிய பணம் அவனை ஆள்வதைப் போல, அவன் உருவாக்கிய சாதியும் அவனை ஆள்கிறது. பணத்தின் மூலத்தையும், அது வளர்ந்த வரலாற்றையும், அதன் தன்மைகளையும் அறிந்தவனுக்கு பணம் கட்டுப்படுகிறது. சாதியின் மூலத்தையும், வரலாற்றையும், மனிதன் தெரிந்து கொண்டால் சாதி அவனுக்கு கட்டுப்பட்டுவிடும்’ என்றேன்.

‘சாதி உருவானது பார்ப்பன சூழ்ச்சி’ என்றார் பகுத்தறிவு சார்.

‘அது தவறான கருத்து. உங்கள் தரப்பை கொஞ்சம் விளக்கமாகச் சொல்லுங்கள்’ என்றேன்.

## 9. அபிராமி பித்தரின் பார்வை

பல வருடங்களுக்குமுன், மடத்தின் பொறுப்புகளை எழுத்து-பூர்வமாக என்னிடம் கொடுப்பதற்கு சில தினங்களுக்குமுன், என் குருநாதரான அபிராமி சித்தர் தன் அறைக்கு என்னை அழைத்தார்.

நரைத்த தலைமுடியை விரித்துப் போட்டிருந்தார். ஒரு கயிற்றுக் கட்டிலில் கெட்டியான ஜமுக்காளம் விரித்து அதன்மேல் படுத்-திருந்தார். மெத்தை போட அனுமதி தரவில்லை. அவரருகே ஓலையாலான கைவிசிறி இருந்தது. அவர் பார்வை படுமிடத்தில் சுவரில் இருந்த படத்தில் அபிராமி ஒயிலாக நின்று கொண்டிருந்தாள்.

மெல்லிய குரலில் ‘துறவை துறப்பவனே பெருந்துறவி’ என்றார் சித்தர்.

குரு கேள்வி கேட்காதபோது பேசாதிருப்பதே முறை.

சிறிது நேரம் கழித்து, ‘நான் மாயை என்றால் என்ன என்று இந்த முதிர்ந்த வயதில்தான் அறியத் தொடங்கி இருக்கிறேன்’ என்றார்.

‘மருத்துவரை வரச் சொல்லட்டுமா?’ என்று கேட்டேன். குறிப்பிட்ட சில ஆபத்து காலங்களில் நியதிகளை மீற சாஸ்திர அனுமதி உண்டு.

சித்தர் புன்னகைத்தார். ‘தேவையில்லை. என் நிலை இப்போது-தான் தெளிவடைந்து வருகிறது. பட்டினத்தாருக்கு வயதான பின்புதான் துறவறம் என்றால் என்னவென்று புரிந்ததாம். என் கதையும் அப்படித்தான் ஆகிவிட்டது’ என்றார்.

எனக்கு அக்கதை தெரியும் என்றபோதிலும் மௌனமாக இருந்தேன். குரு பேசுவதே அபூர்வம். பேச்சில் என்ன இருக்கிறது? பேசுபவர் அல்லவா முக்கியம்?

‘ஆயிரம் வருடங்களுக்கு முன்னால் பூம்புகார்பட்டினத்தில் வாழ்ந்தவர் பட்டினத்தார். திருவெண்காடர் என்ற பெயரும் அவருக்குண்டு. பொருட்செல்வம் குவித்த பெருவணிகர். பிள்ளை இல்லாததால் ஒரு ஏழை வேதியருக்கு பணம் கொடுத்து



அவர் குழந்தையை வாங்கி தன் மகனாக எண்ணி பிரியத்தோடு வளர்த்து வந்தார்.

‘அவன் வளர்ந்தபின் ஏராளமான பொருள் தந்து வணிகம் செய்ய வெளிநாட்டிற்கு அனுப்பி வைத்தார். பிறப்பில் வணிகத் திறமையற்ற மகன் பணமின்றி திரும்பி வந்தான். சிறுபெட்டியை பட்டினத்தாரிடம் தந்தான். ‘இதற்குள் நானீட்டிய எல்லா செல்வமும் இருக்கின்றன’ என்றான். பெட்டிக்குள் ‘காதற்ற ஊசியும் வாராது காண் கடைவழிக்கே’ என்று எழுதப்பட்ட ஓலையும், காதற்ற ஊசியும் இருந்தன. அடுத்த கணமே அரை-யாடையை தவிர பிற அனைத்து செல்வத்தையும் துறந்து தேசாந்திரி ஆகிவிட்டார். பத்திரகிரி மன்னன் நாட்டைத் துறந்து சீடனாக மாறுமளவிற்கு பெரும்புகழ் பெற்ற துறவி ஆனார்.

‘தன் இறுதிக் காலத்தில், கடுங்கோடை காலத்து பகல் பொழு-தொன்றில் நெடுந்தூரம் நடந்து களைப்புற்றிருந்த பட்டினத்தார், நிழல் பரப்பி நின்ற பெரிய மரமொன்றைக் கண்டார். வாழையிலை பறித்து, விரித்து, நீர் தெளித்து அதில் படுத்தார், தலைக்கு சிறு கல்லை வைத்துக் கொண்டார்.

‘அப்போது மரத்திற்கு அப்பால் இரு இளம்பெண்கள் பேசிக் கொண்டிருந்தது காதில் விழுந்தது. ‘யாரோ பெரிய துறவி போலிருக்கிறது. ஆசி பெறுவோமா? என்று கேட்டாள் முதலாமவள். பேச்சு தன்னைப் பற்றியது என்பதால் கூர்ந்து கவனித்தார் பட்டினத்தார். ‘தலைக்கு ஏற்ற தலையணை. உடலுக்கு சுகமாக மெத்தை. நிழலுக்கு குளிர்ச்சியான கூரை! பொருள் தரும் சுகத்தின் மீது ஆசையை விடாத இவரா துறவி?’ என்று கூறி கேலியாக சிரித்தாள் இரண்டாமவள்.

‘திடுக்கிட்ட பட்டினத்தார் கல்லையும், இலையையும் வீசி எறிந்துவிட்டு, மரநிழலைவிட்டு நீங்கி அப்பெண்களின் அருகே சென்றார். ‘பெண்ணே, நீ கூறியதை உணர்ந்து ஏற்றேன். இப்போதாவது நான் துறவி என்பதை ஏற்பாயா?’ என்று கேட்டார். ‘பேரம் பேசும் நீர் திறமையான வணிகர், அய்யா’ என்றாள் அப்பெண். திகைத்தார் பட்டினத்தார். ‘துறவி என்ற பதவி ஆசையை விடாதவரே! பிறர் உம்மைப் பற்றி பேசுவது என்ன என்று கவனித்தீரே, உமக்கு புகழாசை போகவில்லை. பெண்

பாராட்ட வேண்டும் என்று விரும்புகிறீரே, உமக்கு பெண்ணாசையும் போகவில்லை. உம்மிடம் ஆசி பெறுவது பெரும்பாவம்' என்று கூறிவிட்டு அந்த இளம்பெண் தன் தோழியோடு விலகிச் சென்றாள்.

'துறப்பதில்தான் எத்தனை படிநிலைகள்! 'துறப்பது வேறு. துறப்பதாக நினைத்துக் கொள்வது வேறு. துறவியாகத் தோற்றம் தருவது வேறு. நான் இதுவரை எந்த ஞானத்தையும் முழுமையாகப் பெறவில்லை. எவருக்கும் எந்த ஞானத்தையும் தரவில்லை' என்று அவருக்குத் தோன்றியது. தன்னிடம் இல்லாத ஒன்றை எப்படி பிறருக்குத் தரமுடியும்? முதல்முறையாக தன்னுள் ஞானம் பிறப்பதைக் கண்டார். திருவொற்றியூர் சென்றார். நாய் பின் தொடர, பிச்சைஓடு ஏந்தி வந்த பத்திரகிரியாரைப் பார்த்து 'பெரிய குடும்பி' என்று சொல்லி தான் பெற்றதை சீடருக்கும் தந்தார்.'

சிறிது நேரம் பேசுவதை நிறுத்திய சித்தர், 'கேள்வி ஏதேனும் உண்டா?' என்று கேட்டார்.

'எல்லா பதில்களையும் நீங்கள் எப்போதுமே தந்து வந்திருக்கிறீர்கள். நான் ஏன் கேள்வி கேட்க வேண்டும்?' என்றேன்.

பெருமூச்சு விட்டார் சித்தர். 'அதுதான் நான் செய்த மிகப் பெரிய தவறு. கேள்விகளே பதில்களைவிட உயர்ந்தவை. பதில்கள் தரப்படுந்தோறும் மதமும், மரபும், மடமும் வளர்கின்றன. கேள்விகள் எழுப்பப்படுந்தோறும் ஆன்மீகமும், மானுடமும், ஞானமும் உயர்கின்றன' என்றார் சித்தர்.

'வளர்வதாலோ, உயர்வதாலோ என்ன பயன்? அவளது திருவடிகளைத் தவிர பிற எல்லாமே மாயைதானே?' என்றேன்.

'அப்பனே, நீ இங்கு வந்த புதிதில் கேள்விகள் கேட்டுக் கொண்டே இருப்பாய். எல்லோரும் உன்னைக் கண்டித்தபின் கேட்பதை நிறுத்திவிட்டாய். மீண்டும் இப்போதுதான் கேள்வி கேட்க ஆரம்பித்திருக்கிறாய்' என்றார் சித்தர்.

'பதில்?' என்று பணிவுடன் கேட்டேன்.

'அதை நீயே கண்டுபிடித்துக் கொள். கண்டறிந்ததை மனதிற்குள்ளேயே வைத்துக் கொள். கேள்வி எழுந்தால் என்னிடம் கேள். அது மட்டுமே எனக்கு வேண்டும்,' என்றார் சித்தர்.



ரிக், யஜுர், சாமம், அதர்வணம் என்ற நான்கு வேதங்களையும், உபநிஷதம், பகவத்கீதை, பிரம்ம சூத்திரம் என்ற மூன்று தத்துவ பிரஸ்தானதிரயங்களையும், சாங்கியம், யோகம், நியாயம், வைசேஷிகம், பூர்வமீமாம்சம், உத்திரமீமாம்சம் என்ற ஆறு ஆஸ்திக தரிசனங்களையும், சார்வகம், பௌத்தம், ஜைனம் என்ற மூன்று நாஸ்திக தரிசனங்களையும், சைவம், வைணவம், சாக்தம், கௌமாரம், காணபத்யம், சௌரம் என்ற ஆறு மதமார்க்கங்களையும் பெரும்பாலும் கதைகள் மூலமே கற்பித்தவர் சித்தர்.

இவற்றைப்பற்றி ஓரளவிற்காவது தெரிந்தவர்தான் இந்திய ஆன்மீகம்பற்றி பேச அருகதை உள்ளவர் என்பது அவர் கருத்து. ஆனால், தெரியாத ஒன்றைப் பற்றி எத்தனை எளிதாக மனிதர்கள் விமர்சனம் செய்கிறார்கள்! ஏளனம் செய்கிறார்கள்! எதுவுமே அறியாமல் ஆதி சங்கரரையும், புத்த பகவானையும் கேலி செய்து விடுகிறார்கள். எல்லாவற்றையும் கற்ற ராமானுஜர், சங்கரரை 'மாறுவேடமிட்ட புத்தர்' என்று கேலி செய்யும்போது ஏதுமறியாத மற்றவர்களைப் பற்றி வருந்துவானேன்?

'மாயை என்று உலகில் எதுவுமே இல்லை. கள்ளுண்ட மயக்கத்தில் உலகே மாயம் என்று மனிதன் பாடுகிறான். கருத்துண்ட மயக்கத்தில் துறவியும் அதையே சொல்கிறான். மயக்கம் தெளிந்தால் இருவருமே காண்பது மெய்யைத்தானே?' என்றார் சித்தர்.

'நாம் இதுவரை மாயை என்று ஏற்ற கருத்து மட்டுமே மாயை என்று சொல்ல வருகிறீர்களா?' என்று கேட்டேன்.

'தவறு செய்தவன் மாறும்போது சரியானவனைவிட சிறந்த சரியானவனாக, செம்மையானவனாக மாறுகிறான். சரியானவன் தவறை அறியாதவன் என்பதால் அவனது ஞானம் குறைபாடு கொண்டது. தவறு செய்து மீண்டவனது ஞானம் முழுமையானது. அந்த வகையில் தவறான கருத்து நம்மை மாற்றுவழியில் உயர்விற்கு அழைத்துச் சென்ற உத்தம வழிகாட்டி,' என்றார் சித்தர்.

'மாயை பற்றி முப்பது வருடங்கள் அடியேனுக்கு உபதேசம் செய்திருக்கிறீர்கள்' என்றேன். அதிகப்பிரசங்கித்தனமாக பேசி விட்டேனா?

‘முழுமையான ஞானத்தை நீ பெறும் வகையில் முப்பது வருடங்கள் உன்னை தயார் செய்திருக்கிறேன்’ என்றார் சித்தர்.

‘நம் மடத்தின் மரபிற்கும், நெறிகளுக்கும், தர்மத்திற்கும் எதிரான கருத்துகளை நாமே பேசுவது மடத்தை கலைப்பதற்கு வழி செய்துவிடும்’ என்றேன். அவச்சொல் கூறியிருக்க வேண்டியதில்லை.

‘காம்ரேட் கோர்பசேவ் போல நடந்து கொள்கிறேனா? சுவாமி அபிராமி சித்தர் என்ற பெயரை விட, காம்ரேட் அபிராமி சித்தர் என்ற பெயர் புதுமையாகவும், நன்றாகவும் இருக்கிறது’ என்று கூறி சிரித்தார் சித்தர்.

‘மடத்திற்கு நானூறு வருட பாரம்பரியம் உண்டு. சொத்து, வருமானம் உண்டு. சீடர்களும், பக்தர்களும் உண்டு’ என்றேன். சொன்னபின் என்மீதே வெறுப்பு எழுந்தது.

‘பத்திரகிரியாரைப் போல நீயும் பெரிய குடும்பிதான்! துறவற மரபை பேணிப் பாதுகாக்க வாழ்வும், பொருளும் தேவைப்படுவது வேடிக்கையாக இருக்கிறது’ என்றார் சித்தர்.

‘தாங்கள் ஓய்வெடுப்பது நல்லது என்று தோன்றுகிறது. இது பற்றி இன்னொரு நாள் பேசுவோம்’ என்றேன்.

குருநாதர் கையசைத்ததும் அவரது அறையை விட்டு வெளி-யேறினேன். அந்த இன்னொரு நாள் வரவே இல்லை. சில நாட்களிலேயே சித்தர் என்னை மடாதிபதி ஆக்கிவிட்டு தாம் தேசாந்திரி ஆகிவிட்டார். மடத்திலிருந்து எதையும் ஏற்க மறுத்து விட்டார். ‘என்னைப் பற்றி எதுவும் தெரிந்து கொள்ள முயலாதே’ என்று கூறிவிட்டார்.

அன்று சித்தரோடு நான் தொடர்ந்து பேசியிருந்திருக்க வேண்டும். குருவின் மீது வன்முறையைப் பிரயோகித்துவிட்டேன். அதற்காக நான் வருந்தாத நாளில்லை. குருவை எண்ணக் கத்திகளாலோ, உணர்வுத்தீயாலோ, சொற்கற்களாலோ, செயல் முட்களாலோ துன்புறுத்தாதவன் நெருக்கமான சீடனாக இருப்பதில்லை. துன்புறுத்தும் திறனை இழந்தவன் தெளிந்த குருவாக மாறி விடுகிறான்.

மாயை!



நான் மடத்தில் சேர்ந்த புதிதில் சித்தர் தினமும் உபநிஷத வகுப்புகள் நடத்துவதுண்டு. தோள்வரை வளர்ந்த கறுத்த தலைமுடியை விரித்து போட்டுக் கொண்டு கூண்டில் அடைபட்ட பசித்த சிங்கம் உலாவுவது போல உலாவிக் கொண்டே பேசுவார். கேள்வி கேட்டால் தாடியை சிலமுறை உருவிவிட்டு பின் பதில் சொல்வது அவர் பழக்கம். நான் தரையில் விரித்த நீண்ட பாய் மீது பிற மாணவர்களோடு அவர்முன் மெலிந்த மான் போல நடுங்கிய-படி உட்கார்ந்திருப்பேன்.

ஒரு நாள் முண்டக உபநிஷதத்திலிருந்து ஒரு கதாமந்திரத்தை சொல்லித் தந்தார்.

‘மரமொன்றில் அழகிய சிறகுகளைக் கொண்ட இரு பறவைகள் அமர்ந்திருந்தன. ஒரு பறவை இனிய கனிகளை புசித்தது. மற்ற பறவையோ கனிகளை புசிக்காமல், புசிக்கும் பறவையை பார்த்த வண்ணம் அமர்ந்திருந்தது,’ என்றார் சித்தர்.

புதிய சீடன் என்பதால் எனக்கு உற்சாகமும், புத்துணர்வும் அதிகமாக இருந்த காலமது. குரு விளக்குமுன் நான் பேச ஆரம்பித்தேன். ‘முதல் பறவை சலனமுற்று, மாறியபடி இருக்கும் க்ஷர பிரம்மம். அதற்கு மட்டுமே ஆனந்தமுண்டு. இரண்டாவது பறவை அசையாதிருந்து, மாறாதிருக்கும் அக்ஷர பிரம்மம். பிரபஞ்ச மரத்தில் அதற்கு எந்த வேலையுமில்லை’ என்றேன். பிற சீடர்கள் அதிருப்தியுடன் முகம் சுளித்தனர்.

‘சூரியன் ஏழுவண்ண குதிரைகள் பூட்டிய தேரில் செல்பவன். அவன் ஒரு குதிரையை மட்டும் தேரில் பூட்டிக் கிளம்பினால் உலகம் இருண்டு விடும். அடுத்து வரும் மந்திரங்களையும் மனதில் வைத்துக் கொண்டுதான் ஞானப் பாதையில் தேரோட்ட வேண்டும். புசிக்காத பறவை பரமாத்மா. அதற்கு அச்சமும், துன்பமும் இல்லை. புசிக்கும் பறவை ஜீவாத்மா. அது பரமாத்மா அல்ல என்பதால் அதற்கு அச்சமும், துன்பமும் உண்டு. ஏனென்றால் அது புசிக்கும் கனிகளில் கசப்பானவையும் இருக்கக்கூடும். கவனம் கனிகளில் இருக்கும்போது வேடன் அம்பெய்யக் கூடும். ஆனால் பரமாத்மாவின் துணை தனக்குண்டு என்று ஜீவாத்மா அறியும்போது அதன் அச்சமும், துன்பமும் மறைந்து விடுகின்றன,’ என்றார் சித்தர்.

‘ஆனால் புசிக்கும் பறவைதானே கனியுண்ட ஆனந்தத்தைப் பெறுகிறது? அந்த ஆனந்தம் உண்மையானதுதானே? புசிக்காத பறவை எதையும் பெறுவதில்லை. எனவே ஜீவாத்மாவே பரமாத்மாவைவிட உயர்ந்தது என்று கூறலாமே?’ என்றேன்.

‘நீ அதிகபிரசங்கி மட்டுமல்ல. தெய்வ நிந்தனையும் செய்கிறவன்’ என்று எனக்கு மட்டும் கேட்கும் குரலில் சொன்னான் என் அருகே அமர்ந்திருந்தவன்.

‘ஒற்றைப் பிரணவ மந்திரத்தில் பிறப்பது அஞ்ஞானியின் மாயபிரபஞ்சம். ஒற்றை உபநிஷத மந்திரத்தில் பிறப்பது ஞானியின் சத்தியதரிசனம். நம் கற்பனாசக்தியை பிரயோகித்தால் மாயை பற்றிய உண்மையை அறிய முடியும். கதையைச் சற்று விளக்கிச் சொல்கிறேன்.

‘வானை முட்ட முனைந்ததோ என்று எண்ண வைக்கும் மிகப் பெரிய விசித்திரமான மரமொன்று இருந்தது. அதில் ஏராளமான கிளைகள் இருந்தன. ஒவ்வொரு கிளையிலும் பல வகையான இனிப்பான கனிகளும், கசப்பான கனிகளும் இருந்தன. அம்மரத்தின் உச்சாணிக் கிளையில் அழகிய சிறகுகள் கொண்ட பறவை ஒன்று அமர்ந்து கொண்டு சலனமற்று அனைத்தையும் பார்த்துக் கொண்டிருந்தது. கீழிருந்த கிளைகளில் எண்ணற்ற பல வண்ணப்பறவைகள் இருந்தன. அப்பறவைகள் இனிப்பான கனிகள் கிடைத்தால், கனி கிடைத்த கிளையிலேயே இருந்து கொண்டு பிற கனிகளை புசிக்க முனைந்தன. கசப்பான கனிகளை கொத்த நேர்ந்தபோது மட்டும் தலை உயர்த்தி மேலிருந்த பறவையைப் பார்த்தன. எதையோ நினைத்துக் கொண்டு தமக்கு மேலிருந்த கிளைக்கு தாவி ஏறின. இப்படி மெல்ல மெல்ல பறவைகள் உச்சாணிக் கிளையை எட்டியதும் அப்பறவைகள் மறைந்தன. முதலில் இருந்த ஒரு பறவை மட்டுமே தொடர்ந்து இருந்தது’ என்ற சித்தர் வகுப்பைச் சுற்றி கண்களை ஓட்டினார். ‘இதன் பொருளை யாராவது விளக்க முடியுமா?’ என்று கேட்டார்.

பல கைகள் உயர்ந்தன. என்னை அதிகபிரசங்கி என்றவன் எழுந்து நின்று கடகடவென்று பேசினான். ‘மேலிருக்கும் பறவை பரமாத்மா. பிற அனைத்தும் மாயை. படைப்பென்ற மாயையில் இருக்கும் ஜீவாத்மாக்கள் இயங்கி செயலாற்றி நன்மை, தீமை



என்ற கனிகளைப் பெறுகிறார்கள். துன்பம் நேரும்போது மட்டும் பரமாத்மாவை நினைத்து ஒரு படி மேலேறுகிறார்கள். இறுதியாக உச்சாணிக் கிளையை அடைந்ததும், அறியாமை மறைகிறது. ஜீவாத்மா என்ற மாயத்தோற்றமும் மறைகிறது. பரமாத்மா மட்டுமே இருக்கிறது.’

‘ஆனால் பறவைகள் மறைந்தபின்னும் மரம் தொடர்ந்து இருக்கிறதே! மாயை என்றால் அதுவும் மறைந்திருக்க வேண்டுமே’ என்றேன்.

‘அப்பனே! உவமையை, குறியீடுகளை அப்படியே எடுத்துக் கொள்ளக் கூடாது. அபிராமிக்கு தாமரை போன்ற பாதங்கள் என்றால், அதன் மென்மை, மேன்மை, வண்ணம், ஞானக் குறியீடு ஆகியவற்றைத்தான் கணக்கில் சேர்க்கவேண்டும். இலை எங்கே, தண்டு எங்கே என்று கேட்கக் கூடாது’ என்றார் சித்தர்.

வகுப்பு சிரிப்பால் அதிர்ந்தடங்கியது.

‘நீ வருவதற்கு முன்பே ஆதிசங்கரரின் மாயவாதம் பற்றி சொல்லிக் கொடுத்துவிட்டேன். உனக்காக மீண்டும் சுருக்கமாக சொல்கிறேன்’ என்றார் சித்தர். இந்த விளக்கவுரையை மீண்டும் கேட்க வைத்துவிட்டானே என்று பிற மாணவர்கள் என்னை கோபத்தோடு பார்த்தார்கள்.

சித்தரோ உற்சாகமாகப் பேச ஆரம்பித்தார். ‘பல ஆயிரம் வருடங்களுக்கு முன்னால் பாதராயனர் பிரம்ம சூத்திரத்தை எழுதினார். ஒற்றைப் பேருண்மையான பிரம்மம் தன்னிலிருந்து பிரபஞ்சத்தைப் படைக்கிறது என்று அந்த நூல் சொல்கிறது. சத்தியமான பிரம்மம் தன்னிலிருந்து உருவாக்குவது எப்படி பொய்யாக இருக்க முடியும்? அதனால் அதற்கு விளக்கம் எழுதியவர்கள் அனைத்தும் மெய்யே என்று நம்பினார்கள். பொன்னிலிருந்து ஆரமும் செய்யலாம், வளையலும் செய்யலாம். வடிவங்கள் மாறினாலும் பொன் பொன்தானே? அது மண்ணாகி விடாதே? அதுபோலவே மெய்யான பிரம்மத்திலிருந்து பிறக்கும் பிரபஞ்சமும் மெய்யானதே என்றனர் மெய்வாதிகள். ஆனால் முரண்பாடுகளை விளக்கி எப்படி எல்லாமே மெய்தான் என்று அவர்களால் சொல்ல முடியவில்லை.’

‘வாழ்வு என்பது முரண்களின் மோதல் என்று முன்பொரு முறை சொன்னீர்களே. மெய்வாதிகள் மட்டும்தான் அக்காலகட்டத்தில் இருந்தார்களா? அவர்களோடு யாரும் முரண்படவில்லையா?’ என்று கேட்டேன்.

‘ஒருமை என்பது அறியாமையால் இருமையாக, பலவாகத் தோன்றி மோதிக் கொண்டேதான் இருக்கும். அது மாயத் தோற்றங்களின் மோதல். அனைத்தும் மாயை என்பதால் அவற்றின் மோதலால் ஒரு பயனும் இல்லை’ என்றார் சித்தர்.

‘ஆனால், வரலாற்றைப் பார்த்தால் முரண்களின் மோதல்களால்-தான் முன்னேற்றம் உண்டானதாகத் தெரிகிறது. உதாரணமாக இளவரசராக இருந்தபோது சுகத்தை மட்டுமே அறிந்த புத்தர், நோய், வறுமை, முதுமை ஆகிய முரண்பாடுகளைக் கண்டதால்-தானே பௌத்தம் தோன்றியது?’ என்றேன்.

முரண்களால் முன்னேற்றம் விளையும் என்ற கருத்தை சித்தர் தவிர்த்துவிட்டுப் பேச ஆரம்பித்தார். ‘நீ கேட்ட மெய்வாத முரணுக்கு பௌத்தத்தையே உதாரணமாகக் கூறலாம். அக்காலத்தில் தூயபோதம் என்பதே ஆகக்கடைசி சத்தியம் என்பதை ஏற்கும் பௌத்தமும் சூன்யவாதத்தை முன்வைத்து தழைத்து வளர்ந்து கொண்டிருந்தது. சூன்யம் என்றால் வெற்றிடம் என்று தவறாக பொருள் கொள்ளக் கூடாது. சூன்யம் என்றால் மனிதனால் அறியமுடியாத மகத்தான வெளி, இடம் என்று பொருள். அது இயற்கையாக இருப்பது. அப்பேரியற்கையின் சிறுதுளிகளை மனிதன் அறிகிறான். அவன் அறியும்போது அதன் உண்மை தன்மை மாறிவிடுகிறது. அவன் அறிந்தது அவனில் நிலைத்து விடுகிறது. அதையே மெய் என்கிறான். அது ஒருபோதும் தூயமெய்யாகாது. தோற்றங்களை தன் விருப்பப்படி அறிந்து தொகுத்துக் கொள்கிறான். அதுவே அவனுடைய பிரபஞ்சம் ஆகிறது. அவன் அறிவதே பிரபஞ்சம். ஆனால் அதற்கு சுபாவமோ, சாரமோ கிடையாது, எத்தோற்றத்திற்கும் சாரமில்லை. படித்தவர் என்று யாரை சொல்வது? கீதையைப் படித்தவரா, பஞ்சாங்கத்தைப் படித்தவரா, அரிச்சுவடி படித்தவரா, மகாபாரதம் படித்தவரா? இவர்தான் படித்தவர் என்று மனிதன் ஒரு அளவுகோலை வைத்துக் கொள்கிறான். அதைக் கொண்டு ஒருவரை படித்தவரா, இல்லையா என்று அறிகிறான். அதை எப்படி சரி என்பது? தத்துவஞானி துப்பறியும் கதையை வாசிப்பவரை படித்தவராக அறியமாட்டார். வேலை வாய்ப்பிற்காகப் படிப்பவர் பிரம்மசூத்திரம் வாசிப்பவரை வேலையற்றவர் என்று அறிந்து கொள்வார். அறிபவன் தன் அளவுகோலைக் கொண்டு எதையும் அறிகிறான். அவனால் அறியப்படும் தோற்றத்தில் சாரமில்லை. சுபாவமில்லை. அறிபவனின் சாரமே அதில் இருக்கிறது என்கிறார்கள் பௌத்த சூன்யவாதிகள்’ என்றார் சித்தர்.

‘அப்படியானால், உலகில் எத்தனை மனிதர்கள் உண்டோ, அத்தனை பிரபஞ்சங்கள் உண்டா?’ என்று கேட்டேன்.

சிரித்தார் சித்தர். ‘அப்படித்தான் அர்த்தம் வருகிறது. ஆனால் புத்தர் அப்படி சொன்னாரா என்று தெரியவில்லை’ என்றவர் தொடர்ந்து பேசினார். ‘ஆயிரம் வருடங்களுக்கு முன்பு சங்கரரின் குருவின் குருவான கௌடபாதர் உபநிஷதங்களில் மிகவும் சிறியதான மாண்டக்ய உபநிஷதத்திற்கு உரை எழுதும்போது அதில் பௌத்தத்திலிருந்து எடுத்த ஓரிரண்டு முக்கியமான மாயவாத சிந்தனைகளை வேதாந்தத்தோடு பொருத்தி எழுதினார். பின்னாளில் அதை வாசித்த சங்கரர், கௌடபாதரின் மாயவாதக் கருத்துகளின் வேர் பிரம்ம சூத்திரத்தில் இருப்பதாக நினைத்தார். அதிலிருந்து பிறந்ததுதான் சங்கரரின் அத்வைதமும், மாயவாதமும்’ என்றார்.

நான் எழுந்து நின்று, ‘அய்யா, அத்வைதம் என்றால் இரண்டில்லை என்று பொருள். ஒன்றுதான் உள்ளது என்று பிரம்ம சூத்திரம் கூறுகின்றது. சங்கரரும் அதை ஏற்கிறார்தானே?’ என்று கேட்டேன்.

‘சங்கரர் ஒன்றே பிரம்மம் என்ற அளவில் மட்டுமே பிரம்மசூத்திரத்தை ஏற்கிறார். அதற்குமேல் அதை நிராகரிக்கிறார். பிரம்மம் தன்னிலிருந்து பிரபஞ்சத்தை உருவாக்கியது என்றால், வெளிப்படுத்திய அளவில் அதன் பூரண நிலையில் குறைவு உண்டாகிவிடுகிறது. குறைவுடையது பிரம்மமாக இருக்க முடியாது. பிரம்மம் மாற்றமற்ற பூரணமுடையது. எப்போதும் பூரணமாகவே இருக்கிற தூயமெய்யான ஒரே பிரம்மத்திலிருந்து எதுவுமே பிரியவில்லை. பிறக்கவில்லை. எனவே, பிரபஞ்சம்

என்பது மெய்யல்ல. மாயை. ஒரு வீட்டின் கதவை பெயர்த்-தெடுத்தால் அது முழுமையை இழக்கிறது. கதவு மெய்யானதாக இருந்தாலும், வீடு குறைவுபடுகிறது. வீட்டை படமாக வரைந்தால் வீடு குறைவின்றி இருக்கிறது. படத்தில் நாம் காண்பது வீடு போலத் தோன்றினாலும், அது வீடாகாது. அது வீட்டின் தோற்றமே. அது மாயையே. வீடென்று படத்தை நினைப்பவன் அறிவியல் தெரியாதவன். மாற்றமற்ற வீடு பிரம்மம். படம் பிரபஞ்சம்.' என்றார் சித்தர்.

'அப்படியானால் நான் காண்பதெல்லாம் பிரம்மத்தின் படம் என்கிறீர்களா? பிரம்மம் இப்படித்தான் இருக்குமா?' என்று கேட்டேன்.

'மீண்டும் மீண்டும் உவமையை, நேரடி உண்மையாகப் பார்க்கிறாய். அது குழப்பத்தைத்தான் உண்டு பண்ணும். இருமை போல, பல போல, ஒருமை தோற்றம் தருகிறது, பரமாத்மா வெளி எனக் கொள்வோம். ஜீவாத்மாக்களை மண்பாண்டங்களுக்குள் இருக்கும் வெளி எனக் கொள்வோம். பாண்டங்களின் உள்ளே இருக்கும் வெளியும், பாண்டங்களின் புறத்தில் இருக்கும் பெருவெளியும் ஒன்றே. வெவ்வேறானவை போலத் தோன்றும் வெளிகள் பாண்டம் உடைந்தவுடன் ஒரே வெளி என்ற மெய்நிலையை அடைகின்றன. பாண்டங்கள் வடிவில், உருவத்தில், ரூபத்தில், அளவில், தன்மையில் மாறினாலும் உள்ளிருக்கும் வெளி, மாற்றத்திற்கு உட்படாமல் என்றும் ஒன்றுபோலவே உள்ளது. ஜீவாத்மாக்களின் நிலையும் அதுவே. அறியாமை கரையும்போது ஜீவாத்மாக்களின் மாயத்தோற்றம் விலகி அவை பரமாத்மாவாக தரிசனம் தருகின்றன.

'இருட்டில் கயிற்றைக் கண்டு அரவம் என்று மனிதன் அஞ்சு-கிறான். சிறுவிளக்கு ஏற்றினாலும் இருள் விலகி கயிறு கயிறாகவும், அரவம் அரவமாகவும் தெரியும். இப்படி தோற்றத்தவறு, காட்சிப் பிழை ஜீவாத்மாவின் அறியாமையால் உண்டாகிறது. ஞானம் என்னும் ஒளிவிளக்கை ஏற்றினால் மாயக்காட்சி நீங்கி, சத்திய தரிசனம் கிடைக்கும். பிரம்மத்தின் வேறு நிலைகள் என்று சொல்லப்படும் சத்திலிருந்தோ, அசத்திலிருந்தோ எதுவும் பிறப்பதில்லை படைக்கப்படுவதில்லை. பிரம்மம் மாற்றமற்றது



என்பதால் படைப்பென்பதே நிகழவில்லை. பிரம்ம சத்ய, ஜகன் மித்ய. பிரம்மம் மெய். உலகம் பொய்' என்று நிதானமான குரலில் கூறி நிறுத்தினார் சித்தர்.

நான் மீண்டும் எழுந்ததும், சித்தர் 'சங்கரரின் சத்தியவாக்கைப் புரிந்து கொள்வது மிகவும் சிரமமான காரியம். இன்று நான் சொன்னவற்றைப் பற்றி சிறிது நாட்கள் தியானம் செய். அதன்பின் மாயை பற்றி இன்னும் விளக்கமாகச் சொல்கிறேன்' என்றார் சித்தர்.

மீண்டும் மீண்டும் என்னுள் மாயவாதம் பற்றிய கேள்விகள் எழுந்தன. ஆனால், கேள்வி கேட்பவன் கேலிக்கு ஆளாக்கப்-பட்டபோது, அவன் கேட்பதை நிறுத்திவிட்டான். பல ஆண்டுகள் இடைவிடாது சூழலில் ஒலித்த மாயவாதம் மனதின் ஆழத்தில் சென்றுவிட்டது. விதையிட்டு மாயவாத மரத்தை வளர்த்தவரே முப்பது ஆண்டுகள் கழித்து வேரில் வெந்நீர் ஊற்றிய பின், மறைந்திருந்த கேள்விகள் மீண்டும் முளைத்தெழ ஆரம்பித்தன. ஆனால், அப்போது நான் பதில்களைத் தரும் மாயவாத குருவாகி-விட்டேன்.

தத்துவத்திலிருந்த அகக்குழப்பத்தை அபிராமியின் மீது கொண்ட பக்தியாலும், பலனை விரும்பாத கர்மத்தாலும் மறைத்துக் கொண்டேன். அவளே என் மூச்சாக மாறினாள். அபிராமி அந்தாதியே என் மந்திரமாக மாறியது.

அபிராமி மடம் பல நூறு வருடங்களுக்கு முன் திருக்கடவூர் அபிராமி பட்டரால் ஆசிர்வதிக்கப் பெற்ற ஒரு யோகியால் திருச்சிக்குப் பக்கமாக காவிரி நதிக் கரையில் அமைக்கப்பட்டது. பட்டர், சித்தர், பித்தர் என்ற மூன்றில் ஏதோ ஒரு பட்டப்பெயரோடு மடத் தலைவர் பதவி ஏற்பார்.

அடுத்து வரும் மடாதிபதிக்கு, முன்பிருந்த எல்லா குருக்களின் யோக சக்தியும் வந்துவிடும் என்பது பரவலான நம்பிக்கை. அது உண்மையோ இல்லையோ, மடத்தின் அதிகாரம் முழுமையாக வந்துவிடும். அதில் சந்தேகமே இல்லை. கூடவே மடத்திலிருப்-பவர்களின் தகாத செயல்களுக்கான பொறுப்பும் வந்துவிடும். அதிலும் சந்தேகமே இல்லை.

என்னிடம் புலனுக்கு அப்பாற்பட்ட அமானுட சக்திகள் இருப்பதாக பலர் நம்புகிறார்கள். வம்சி, தத்தா போன்ற

படித்தவர்களும் அதற்கு விலக்கல்ல. வாத்சல்யாவோ என்னை ஆணுருவில் வந்த அபிராமியே என்று நினைக்கிறாள். ஆனால் இது போன்ற சக்திகளில் புதுமை என்ன இருக்கிறது என்று எனக்குப் புரிந்ததே இல்லை. கல்வி கற்பவனுக்கு அறிவு சேகர-மாவது போல, யோகம் செய்பவனுக்கு சக்தி சேகரமாகிறது. யோகம் செய்ய விருப்பமில்லாத மனிதன், காணிக்கை கொடுத்து யோக சக்தியை பெற்றுக் கொள்ள விரும்புகிறான்.

எல்லாம் ஒரு வணிக பேரம்தான். குறைந்த அளவு காணிக்கை மூலம் கிடைக்கும் லௌகீக பலன்களின் அளவைப் பொறுத்து யோகியின் தரம் பக்தனால் நிர்ணயிக்கப்படுகிறது. படித்தவனுக்கு பதவியும், பணமும் தந்து வேலைக்கு வைத்துக் கொள்வது போல துறவிக்கு மரியாதையும், காணிக்கையும் தந்து பயன்படுத்திக் கொள்கிறான். மனித சுபாவம் தெரிந்த போதிலும், நான் ஒன்றும் அறியாதவன் போல் இருப்பதுதான் பிறருக்கு பிரச்சனையை உண்டாக்காமல் அவர்களை பாதுகாக்கும் வழி.

அபிராமியின் அருளைத் தர ஊர், ஊராக அலைகிறேன். அதைப் பெற்றுக் கொள்ள ஒருவரும் தயாராக இல்லை. பெறக் கூடியவர்-களோ என்னைவிட்டுத் தள்ளி நிற்கிறார்கள். ஒரே விதிவிலக்கு வாத்சல்யா.

நான் நிச்சயதார்த்தம் போன்ற நிகழ்ச்சிகளில் கலந்து கொள்பவ-னல்ல. ஆனால் வாத்சல்யா என்னிடம் 'தத்தா அண்ணா என் சொந்த அண்ணனைப் போன்றவர், நீங்கள் அவசியம் வர வேண்டும்' என்று கேட்டுக் கொண்டபோது என்னால் மறுக்க முடியவில்லை. 'நடந்து வருகிறேன்' என்று சொன்னதையும் கேட்காமல், பெரிய காரை அனுப்பி வைத்துவிட்டாள். இதில் கள்ளி அபிராமி என்ன கணக்கு வைத்திருக்கிறாளோ!

வாயாவி போன்றவர்களோடு ஏதேனும் தத்துவார்த்தமாக பேசலாம் என்று நினைத்தால், அரைகுறை பகுத்தறிவோடு நடேசனும், சாதிச் சிந்தனைகளோடு கரிகாலனும் ஏதேதோ பேசிக் கொண்டிருக்கிறார்கள். கரிகாலன் மனைவி யசோதா வந்திருந்தால் பௌத்தம் பற்றி பேசியிருக்கலாம். சிறுவயது என்றாலும் விவரமாகப் பேசுவாள். தத்துவம் பேசும் ஆசையைத் துறக்க முடியவில்லை. முழுமையற்று நிற்கிறதே என் தத்துவ ஞானம். அபிராமியின் திருவுள்ளம் என்னவோ!



சுத்தமாக இருந்த ஒரு பருமனான மனிதர் துண்டை இடுப்பில் கட்டிக் கொண்டு என்னருகே வந்து கைகூப்பி நின்றார். தமிழும், கன்னடமும் கலந்து பேசினார். 'அய்யா, அடியேன் பெயர் பிசிபேளா பிரசாதப்பா. சமையல் அடியவனுடையது. அபிராமிக்கு என்ன படைப்பது என்று உத்தரவிட்டால், தனியாக சமைத்து விடுவேன். எதுவானாலும் சரி. சந்தோஷமாகச் செய்கிறேன்.' என்றார்.

'எல்லோருக்கும் சமைப்பதே எனக்குப் போதும். தனியாக எதுவும் செய்யவேண்டாம்' என்றேன். தயங்கி நின்றவர் வாத்சல்யாவைப் பார்த்தார். அவள் வேலைதானா இது?

'அவர் சொல்வதைப் போலவே செய்து விடுங்கள்' என்று அவரிடம் சொன்ன வாத்சல்யா என்னைப் பார்த்து, 'அய்யா, பிரசாதப்பாரு குண்டு, குண்டான புத்தகங்கள் நிறைய வாசிப்பார். ஜே.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கூட பேசி இருக்கிறார்' என்றாள்.

'உட்காரலாமே' என்றேன்.

சில வினாடிகள் தயங்கி விட்டு பவ்வியமாக என்னெதிரே இருந்த நாற்காலியில் அமர்ந்தார் பிசிபேளா பிரசாதப்பா.

## 10. பிசிபேளா பிரசாதப்பாவின் பார்வை

தசரதன் என்ற பெயருக்கு பத்து ரதங்களை ஓட்ட வல்லவன் என்பது பொருள். அவனது மகனான ராமன் பத்துத்தலை ராவணனை வென்றான். தசரதன் என்ற பெயர் தற்செயலானதாக, தொடர்பற்றதாக இருக்க முடியுமா? அது பிறிதொன்றை மறை-முகமாகச் சுட்டும் குறியீடு அல்லவா? பெயர்கள், இடங்கள், நிகழ்ச்சிகள், பொருட்கள், நேரங்கள் எல்லாமே வாழ்வில் மனிதன் அறிய வேண்டியதை முதலிலேயே சுட்டிக்காட்டும் குறியீடு-களாகத்தான் இருக்க வேண்டும்.

எனக்கு பிரசாதப்பா என்று என்ன நினைத்து என் அம்மா பெயர் வைத்தாரோ தெரியாது. ஆனால் அப்பெயரை என் சமையல் தொழிலின் மூலதனம் என்றுதான் நினைக்கிறேன். நான்

ஒவ்வொரு முறை சமைக்கும் போதும் அது பகவானுக்கான படையல் என்றும், அதை வாடிக்கையாளர்களிடம் தரும்போது பகவானின் பிரசாதம் என்று மட்டுமே நினைக்கிறேன். ருசி எப்படி இருக்கும் என்று ஒருபோதும் கவலைப்பட்டதே இல்லை. அதை பகவான் பார்த்துக் கொள்வார். எல்லோருக்கும் ஒரே மாதிரியான கவனத்தோடுதான் சமைப்பேன். ஆளைப் பார்த்து அடுப்பை கவனிப்பது என் வழியல்ல. ஒரு வேளை அதனால்தான் பித்தர் பொது சமையலே போதும் என்றாரோ?

அபிராமி பித்தர் என்னை அமரச் சொன்னதும் சில வினாடிகள் திகைத்து நின்றேன். யோகிகள், துறவிகள், தலைவர்கள், பெரியவர்கள் முன்னால் சமமாக அமருவது மேல் நாட்டாருக்கோ, தன்னிலை அறியாமல் மேல்நாட்டாரை பின்பற்றும் இந்தியருக்கோ சாதாரணமானதாக இருக்கலாம். எனக்கு?

மண்டபத்தில் தரையில் அமர இடம் இருக்கவில்லை. எங்கும் நாற்காலிகள். நின்று கொண்டே பேசினால் மற்றவர்கள் மேடையைப் பார்ப்பது எப்படி? தயக்கத்தோடு நாற்காலியில் அமராமல் அமர்ந்தேன்.

‘ஜே.கேயின் சீடரா?’ என்று கேட்டார் அபிராமி பித்தர்.

‘தனக்கு அப்படிப்பட்ட எவருமில்லை என்று அவர் சொல்லி-யிருக்கிறாரே. தூரத்திலிருந்து அவர் பேச்சைக் கேட்டிருக்கிறேன். அவ்வளவுதான். அவர் வேறு யாருடனோ பேசியது என்னோடு நேரடியாகப் பேசியது போலிருந்தது’ என்றேன்.

‘நான்தான் தப்பாக புரிந்து கொண்டு விட்டேனோ?’ என்றார் வாத்சல்யா சின்னம்மா.

‘பல வருடங்களுக்கு முன்னால் அடியேன் வேலையில்லாமல் இருந்த காலமது. என்னை கிட்டத்தட்ட அனாதை என்று கூட சொல்லலாம்’ என்றேன்.

‘பிரசாதப்பாரு, அப்படிச் சொல்லாதீர்கள். என்னை உங்கள் பெண்ணாக நினைத்துக் கொள்ளுங்கள்’ என்றார் சின்னம்மா.

‘அது கஷ்டம் சின்னம்மா. வேண்டுமானால் தாயாக நினைத்துக் கொள்கிறேன்’ என்றேன்.



‘அனாதை அதிகபட்ச அதிர்ஷ்டக்காரன். உறவுகளால் உண்டாகும் சிக்கல்கள் எதுவுமில்லாமல் எப்போதும் அபிராமியை இடைவிடாது நினைத்துக் கொண்டிருக்கலாம்’ என்றார் அபிராமி பித்தர்.

‘சிறுவயதில் கிடைக்கும் வேலையை சிறிது நாட்கள் செய்வேன். கொஞ்சம் பணம் சேர்ந்தவுடன் பணம் தீரும் வரை தேசாந்திரி ஆகிவிடுவேன். கன்னடத்திலும், தமிழிலும் நிறைய வாசிப்பேன்’ என்றேன்.

‘மொழிகளை முறையாக கற்றீர்களோ? யார் உங்கள் ஆசிரியர்?’ என்று கேட்டார் அபிராமி பித்தர்.

‘அடியேனுக்கு அந்த பாக்கியம் இல்லை. எந்த பள்ளியிலும், கல்லூரியிலும் இந்த மொழிகளை கற்றுக் கொள்ளவில்லை. அடியேன் பேராசிரியர்களோடும், பண்டிதர்களோடும் பழக்க-மில்லாத பாவி’ என்றேன்.

‘அப்படியானால் உங்களுக்கு மொழிகளில் உண்மையான பயிற்சியும், தேர்ச்சியும், திறமையும் நிச்சயம் இருக்கும்’ என்றார் அபிராமி பித்தர்.

புன்னகைத்தேன். ‘ஒரு முறை சென்னையில் அடையாறு பக்கம் போய்க் கொண்டிருந்தேன். சாலையோரமாக பக்கவாத பாதிப்-போடு இருந்த ஒரு பெரியவர் என்னை அருகே அழைத்தார். குழறிப் பேசினார். ‘தம்பி, என்னை ஒரு வண்டியில் வைத்து, ஜே. கே. தங்கி இருக்கும் வீட்டிற்கு கொண்டு போய் விட முடியுமா?’ என்று கேட்டார். எனக்குத்தான் வேலை எதுவு-மில்லையே! அவரை ஒரு வாடகை வண்டியில் ஏற்றிக் கொண்டு ஜே.கே. எங்கிருக்கிறார் என்று விசாரித்துக் கொண்டு சென்றேன். போகும் வழியில் தன் கதையைச் சொன்னார். பல காலமாக ஒருபக்க கை, கால் செயலற்று போயிருந்தன. மருத்துவத்தின் மூலம் சிறிய முன்னேற்றம்தான் கிடைத்தது. கோவில்களுக்கு போனதில் ஒரு பலனும் இல்லை. ஆசிரமங்களை, சாமியார்களை தேடிப் போனதில் பண விரயம்தான் பலனாகக் கிடைத்தது. அப்புறம் ஜே.கே. பற்றி யாரோ சொல்லி இருக்கிறார்கள். அவர் பார்வை தன்மீது பட்டால் நோய் தீர்ந்து விடும் என்ற நம்பிக்கை வந்துவிட்டது. ‘ஜே.கே. சென்னைக்கு வந்திருக்கிறார். சில நாட்கள் இருப்பார்’ என்று கேள்விப்பட்டதும், வீட்டில் யாரிடமும்

சொல்லாமல் கிளம்பி வந்து வழி தெரியாமல் தடுமாறிக் கொண்டிருக்கிறார்.

‘பெரியவரிடம் ‘அய்யா, ஜே.கே. நோய் தீர்க்கும் வேலையெல்லாம் செய்வதாக கேள்விப்பட்டதில்லை. அவரும் அப்படி சொன்னதில்லை’ என்றேன். ‘சாமி தன்னை எப்போதும் சாமி என்று சொல்லுமா?’ என்று கேட்டார் பெரியவர். இவருக்கு எப்படி புரிய வைப்பது? ஜே.கே. பற்றி விவரமாக சொல்ல நினைத்தேன். ‘அய்யா, ஜே.கே. சிறு பிள்ளையாக இருந்தபோது அவரிடம் ஏதோ விசேஷ அம்சம் இருக்கிறது என்று தெரிந்து கொண்ட வெள்ளைக்காரர்கள் சிலர் அவரை உலக குரு ஆக்க நினைத்தார்கள்’ என்று ஆரம்பித்தேன். ‘பார்த்தாயா தம்பி, வெள்ளைக்காரர்களுக்கு அவர் சாமி என்று தெரிந்திருக்கிறது. அப்படியானால் என் நினைப்பு சரிதான்’ என்றார் பெரியவர்’ என்றேன்.

‘ஜே.கே. என்ன சாதி?’ என்று கேட்டார் கரிகாலன்.

‘தெலுங்கு பிராமணர்’ என்றேன்.

‘பார்ப்பனர் என்றாலும் வெள்ளைக்காரர்களோடு பழகியவர் என்பதால், கெட்ட குணங்களை வெளிக்காட்டாமல் நாகரீகமானவராக இருந்திருப்பார்’ என்றார் பகுத்தறிவு சார்.

பித்தரால் புன்னகையை மறைக்க முடியவில்லை.

கதையைத் தொடர்ந்தேன். ‘பெரியவரிடம், ‘அய்யா, பல வருடங்கள் ஒரு நிறுவனம் அவரை உலக குருவாக மாற்ற பயிற்சி தந்தது. ஒரு நாள் ‘எவரும் எவருக்கும் குரு கிடையாது. எல்லாவற்றையும் நிறுத்துங்கள்’ என்று சொன்னார். அந்த நிறுவனத்திலிருந்தும் விலகி விட்டார். தனக்கு மற்றவர்கள் தந்த கோடிக் கணக்கான நன்கொடை எல்லாவற்றையும் திருப்பித் தந்து விட்டார். இப்போது நாடுநாடாக போகிறார். தான் அறிந்து கொண்டவற்றை பேசுகிறார். தத்துவ ஞானி. அவரிடம் போய் கைகால் சரியாக ஆசிர்வாதம் கேட்பது சரிவருமா?’ என்று கேட்டேன். ‘நன்கொடையாக வந்த பணத்தை திருப்பித் தந்தாரே. மனிதன் செய்யும் காரியமா அது?’ என்றார் பெரியவர். ‘இது போல் ஆசிர்வாதம் கேட்டால் அவருக்கு சட்டென்று கோபம் வந்து விடுமாம்’ என்று எச்சரிக்கை விடுத்தேன். பெரியவரோ மகிழ்ந்து



போனார். ‘வராதா பின்னே? ருத்ரமூர்த்தியான சிவபெருமானின் அவதாரத்திற்கு கோபம் வராமல் இருக்குமா?’ என்றார். நான் எதிராகப் பேசப்பேச பெரியவரின் நம்பிக்கை வலுப்பட்டது’ என்றேன்.

‘மனிதன் விரும்பி ஏற்றுக் கொண்ட நம்பிக்கையை மாற்றும் சக்தி உலகில் உண்டா? கடல் நீரின் உப்பு சுவையை இனிப்பாக மாற்ற ஒரு குடம் தேனால் முடியுமா?’ என்று கேட்டார் அபிராமி பித்தர்.

‘ஜே.கே. வீட்டுக் காவலாளி நாங்கள் எவ்வளவு கெஞ்சியும் உள்ளே விட மறுத்தார். பின் சிறிதளவு கருணை வந்து, ‘அவர் சாயந்திரம் ஆறு மணிக்கு பால்கனிக்கு வந்து சில நிமிடங்கள் நிற்பார். அப்போது வேண்டுமானால் தெருவிலிருந்தே பார்த்துக் கொள்ளுங்கள்’ என்றார். தெருவிலிருந்து பார்க்க அவர் அனுமதி அவசியமில்லை என்றாலும், தகவல் முக்கியமானது என்பதால் நன்றி கூறினோம். பெரியவர் பால்கனி நன்றாக தெரியும்படியான கோணத்தில் நடைபாதையில் வண்டியை நிறுத்தச் சொல்லி அதிலேயே உட்கார்ந்திருந்தார். அப்போது பகல் மணி இரண்டு. வண்டிக்காரன் கேட்ட பணத்தைக் கொடுத்து, இருவருக்கும் சாப்பாடு வாங்கித் தந்தேன். சம்பந்தமில்லாத இடத்தில் ஏன் செலவு செய்கிறேன் என்று புரியாமலேயே செலவழித்தேன். சரியாக ஆறு மணிக்கு பால்கனிக்கு ஜே.கே. வந்தார்.’ என்றேன்.

‘வெள்ளைக்காரர்களோடு பழகியவர். அதனால்தான் நேரந்தவறாமல் செயல்பட்டிருக்கிறார்’ என்றார் பகுத்தறிவு சார்.

‘அவர் கோட்டும் சூட்டும் போட்டிருந்தார். வானத்தையும், சூரியாஸ்தமனத்தையும் பார்த்துக் கொண்டிருந்தார். பெரியவரோ பக்திப் பரவசமாகி தலைக்கு மேலே கைகளைக் கூப்பிக் கொண்டு ‘பகவானே காப்பாற்று’ என்று வாய்விட்டு முணுமுணுத்து பிரார்த்தனை செய்தார். யதேச்சையாக ஜே.கே. நாங்களிருந்த வண்டியை ஒரு முறை பார்த்தது போல் எங்களுக்குத் தோன்றியது. பெரியவர் புளகாங்கிதமடைந்து ‘பகவான் என் குறையை கேட்டுவிட்டார்’ என்று பதற்றத்தோடு கூறிக் கொண்டே வண்டியிலிருந்து அவசரமாக இறங்க முயன்று, இடித்துக் கொண்டு நடைபாதை மண்மீது குப்புற விழுந்தார். அதற்குள்

ஜே.கே. உள்ளே போய்விட்டார். அவர் எங்களைப் பார்த்தாரா என்பது இன்றுவரை எங்களுக்கு நிச்சயமாகத் தெரியாது' என்றேன்.

'பெரியவருக்கு உடம்பு சரியாகி விட்டதுதானே' ஆர்வத்தோடு கேட்டார் சின்னம்மா. எத்தனையோ தடவை என்னிடம் இக்கதையை கேட்டிருந்தாலும் புதிதாக கேட்பது போலக் கேட்டார்.

'கீழே விழுந்த பெரியவர் சிறிது நேரம் கழித்து என்னைப் பற்றாமலே தள்ளாடி எழுந்து நின்றார். மெல்ல தடுமாறி நடந்து சென்று, வாசலுக்கு ஏதோ வேலையாக வந்த வெண்ணிற உடை அணிந்திருந்த உதவியாளர் ஒருவரிடம் 'பகவானின் பார்வை எனக்கு சுகம் தந்துவிட்டது' என்று ஆரம்பித்து தன் கதையைச் சொன்னார். உதவியாளருக்கு ஒரே சந்தோஷம். அவர் பின்னோடு சென்ற நான், 'ஐயா, வண்டியிலிருந்து இடித்துக் கொண்டு கீழே விழும்போது முன்பிருந்த நரம்பு சுளுக்கு குணமாகி விட்டது என்று நினைக்கிறேன். தற்செயலான நல்விபத்தை ஜே.கே.யின் பார்வையின் அருள் என்கிறார். அந்த பாமரத்தனத்தை பொருட்படுத்த வேண்டாம்' என்று பெரியவர் புரிந்து கொள்ள முடியாதபடி அரைகுறை ஆங்கிலத்தில் சொன்னேன். சிறிது நேரம் யோசித்த உதவியாளர், 'ஜே.கே. பெரிய மனிதர்களோடு தோட்டத்தில் பேசிக் கொண்டிருக்கிறார். நீங்கள் வேண்டுமானால் கொஞ்சம் தள்ளி நின்று அவர் பேசுவதை சில நிமிடங்கள் கேட்க அனுமதி தருகிறேன். அவர் கவனம் சிதறுமாறு எதுவும் செய்து விடக் கூடாது. சம்மதமா?' என்றார். 'அது போதும். அது போதும்' என்று துடித்தார் பெரியவர். ஜே.கே. பெரிய வர்த்தக நிறுவனத்தின் இயக்குனர் போல நாகரீகமான உடையும், மின்னும் சப்பாத்துக்-களும் அணிந்திருந்தார். மெல்ல நிதானமாக ஆங்கிலத்தில் மற்றவர்களோடு பேசிக் கொண்டிருந்தார்.' என்றேன்.

'என்ன பேசினார்?' என்று ஆர்வத்தோடு கேட்டார் பகுத்தறிவு சார்.

'ஞானிகள் சிறப்பாகப் பேச வேண்டுமானால், கூட இருப்பவர்கள் சிறப்பான கேள்விகளைக் கேட்க வேண்டும். அப்படி யார் கேட்கப் போகிறார்கள்? ஆயிரம் பேர்கள், பல்லாயிரம் முறைகள் கேட்ட



கேள்விகளையே அன்று அங்கிருந்தவர்கள் திரும்பவும் கேட்டனர். கேள்வி கேட்டு தாங்கள் புத்திசாலிகள் என்று காட்டிக் கொள்வதுதான் அவர்களுக்கு முக்கியம். பதிலைப் பற்றி யார் கவலைப்படுகிறார்கள்? ஜே.கே. எத்தனையோ முறைகள் தான் ஏற்கனவே சொல்லி விட்ட பதில்களை திரும்பவும் சலிக்காமல் சொல்லிக் கொண்டிருந்தார். ஆனால், மற்றவர்களோடு அவர் பேசும்போது என்னோடு தனிப்பட்ட முறையில் பேசுவது போன்ற உணர்வு எனக்கு ஏற்பட்டது. ஆச்சரியமாக இருந்தது' என்றேன்.

'பெரியவர் குணமடைந்ததை நீங்கள் கண்களால் பார்த்தீர்கள்-தானே?' என்று கேட்டார் சின்னம்மா.

'அது தற்செயலான நல்விபத்து என்று பிசிபேளா சொன்னாரே. அதுதான் விஞ்ஞானத்தோடு பொருந்தி வருகிறது' என்ற பகுத்தறிவு சார் அபிராமி பித்தரைப் பார்த்து, 'ஆனால் பித்தர் சாமி அற்புதங்களை பண்ணுவார் என்று நினைக்கிறேன். கேட்க முடியாதவனை பேச வைப்பார். நடக்க முடியாதவனை கேட்க வைப்பார்' என்று போலி பணிவோடு கேலியாகக் கூறினார்.

சின்னம்மாவின் முகம் சிணுங்கியது. 'அய்யா, மன்னிக்க வேண்டும்' என்று அபிராமி பித்தரிடம் மன்னிப்பு கேட்டார். தன் அழைப்பின் பேரில் பித்தர் வந்திருப்பதால் அவருக்கு நடப்பவற்றிற்கு சின்னம்மா தான்தான் பொறுப்பென்று நினைத்தாரோ! 'சார் உங்களுக்கு பித்தரைய்யா பற்றி தெரிய-வில்லை' என்று ஆரம்பித்தவர் பித்தரின் கண்களைக் கண்டதும், பேசுவதை நிறுத்தி விட்டு தலையை குனிந்து கொண்டார்.

'அற்புதங்கள் என்று பக்தர்கள் சொல்வது எதிலும் எனக்கு நம்பிக்கை இல்லை' என்றார் அபிராமி பித்தர்.

பகுத்தறிவு சாரின் தொனி மாறியது. 'அய்யா, உங்கள் மீது இப்போது நம்பிக்கை ஏற்படுகிறது' என்றார். சாரிடம் கரிகாலன் 'நீங்கள் சாதி அமைப்பைப் பற்றி சரியாக புரிந்து கொள்ளவில்லை' என்று மீண்டும் பேச ஆரம்பிக்கவும் சாரின் கவனம் மாறியது.

'பிரம்மமே அனைத்தின் சாரம் என்று கூறும் சங்கர சமுத்திரத்தில் நான் சிறிய படகை ஓட்டுகிறவன். எல்லாமே சக்திதான். எல்லா சக்தியும் என்னை பொறுத்தவரை பிரம்ம சாரம் கொண்ட ஒரே சக்திதான். அது செயல்படும் தளத்தைப் பொறுத்து அதன் தரமும்,

வீரியமும் மாறுகின்றன. சாதாரண மனித சக்தியின் வீரியத்தை-விட ஒரு யோகியின் சக்தியின் வீரியம் அதிகமாக இருக்கும். நதி கடலை தொடும்போது, நதி சிறுமையை இழந்து கடலில் விரிவைப் பெறுகிறது. சாதாரண மனிதனின் சக்தி ஞானியின் சக்தியோடு உறவு கொள்ளும்போது சாதாரணமானவன் விரிவடைகிறான். அப்போது அவன் பிரச்சனை தீருகிறது. இதுவும் ஒரு விஞ்ஞானம்தான். அந்த விஞ்ஞான அறிவு இல்லாதவனுக்கு நடப்பதெல்லாம் அற்புதம்தான்' என்றார் அபிராமி பித்தர்.

'அதாவது உங்கள் மடத்திற்கு வரும் பக்தர்கள் வாழ்வில் ஏராளமான அற்புதங்கள் நடக்கின்றன என்று புரிந்து கொள்ளட்டுமா' என்று கேட்டார் வாயாவி மாமா.

சிரித்தார் அபிராமி பித்தர். 'இல்லை. அற்புதங்களுக்கு ஆசைப்படும் அர்த்தமற்ற, பாமரத்தனமான மனநிலையை நான் ஆதரிப்பது இல்லை. பெரும்பாலான சமயங்களில் இதுபோன்ற கோரிக்கைகளை புறக்கணித்து விடுவேன். அவர்களோடு பேசுவதை தவிர்த்து விடுவேன். என் பணி மடத்தையும், அது ஏற்றுக் கொண்ட தர்மத்தையும் தொடர்ந்திருக்க செய்வது மட்டுமே. வேறொரு விஷயமும் உண்டு. அவரவர் கர்மத்தை அவரவர்தான் அனுபவித்து தீர்க்க வேண்டும். பிறர் குறுக்கிடக் கூடாது. அப்படி செய்வது பிரபஞ்சத்தின் மகத்தான விதிகளில் குறுக்கிடுவதாகும். அப்படிச் செய்தால் எவரது கர்மத்தை மாற்ற நினைத்தாரோ அவரது கர்மத்தைப் போல பல மடங்கு கர்மத்தை யோகி சுமக்க வேண்டியதாகிவிடும். பிரசாதப்பா குறிப்பிட்ட பெரியவரின் நம்பிக்கைதான் அவரை கீழே விழ வைத்து விஞ்ஞான பூர்வமாக குணப்படுத்தியது என்று நினைக்கிறேன். நம்பிக்கைக்கு பெரும்சக்தி உண்டு' என்றார் அபிராமி பித்தர்.

'ஜே.கே. விடம் சக்தி எதுவும் இல்லை என்கிறீர்களா?' என்று கேட்டேன்.

'உலக புகழ் பெற்ற தத்துவ மேதை என்று அவரைப்பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன். மற்றபடி அவரைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. அப்படி இருக்கும்போது கருத்து சொல்வது முறையாகாது. எந்த ஒரு நிகழ்ச்சிக்கும் பல வகையான விளக்கங்கள் தர முடியும். நான் என் கோணத்தில் விளக்கம்



தந்தேன். அது இருக்கட்டும், அவருடைய செய்தி என்ன?' என்று கேட்டார் அபிராமி பித்தர்.

'சத்தியம் என்பது பாதையற்ற நிலம். நிறுவனமோ, மதமோ, குழுவோ சத்தியத்திற்கு இட்டு செல்ல முடியாது. ஒருவரை பின்பற்ற தொடங்கிய கணமே, மனிதன் சத்தியத்திலிருந்து விலக ஆரம்பித்து விடுகிறான். அனைத்து கூண்டுகளிலிருந்தும், அச்சங்களிலிருந்தும் மனிதன் தன்னை முழுமையாக விடுவித்துக் கொள்ள வேண்டும். அப்போது சத்தியத்தை அடையலாம் என்று ஜே.கே. சொல்கிறார். உலகக் கல்வி முறையை மாற்றி அமைக்க வேண்டும் என்று மிகவும் விரும்பினார்' என்றேன்.

'அவருடைய வழியின் மூலநூல் என்ன?' என்று கேட்டார் அபிராமி பித்தர்.

'அவர்தான் எல்லாவற்றையும் விட்டுவிட்டாரே!' என்றேன்.

'அதெப்படி? எதையும் ஆதாரத்தோடு நிரூபிக்க வேண்டாமா? இந்துக்கள் கீதையை மூலநூலாக காட்டுவதுபோல எதையாவது ஆதாரமாகக் கொள்ள வேண்டாமா?' என்று கேட்டார் பகுத்தறிவு சார்.

'இது கீதையை பற்றி இந்தியாவில் இருக்கும் பரவலான பள்ளிப் பாடப்புத்தகக் கருத்து. இந்து என்று அடையாளப்படுத்தப்-பட்டவரால் எழுதப்பட்டிருந்தாலும், கீதை மதநூல் அல்ல. ஆன்மீகநூல். கீதை காட்டும் மதமற்ற பாதையில் செல்பவர்கள் எல்லோருக்கும் அது மூலநூல்தான். மூலநூல் மதநூலாக இருக்க வேண்டிய அவசியமில்லை' என்றார் வாயாவி மாமா.

'என்ன இப்படி சொல்கிறீர்கள்? இந்துக் கடவுளான கிருஷ்ணன் இந்துவான அர்ச்சுனனுக்கு போர்க்களத்தில் கீதையை உபதேசித்-தான் என்ற நம்ப முடியாத கட்டுக்கதையை இந்து பார்ப்பனர்கள் சொல்கிறார்களே?' என்றார் பகுத்தறிவு சார்.

'கீதையை கடவுளான கிருஷ்ணர் எழுதியிருக்கலாம். அல்லது வியாசரே எழுதியிருக்கலாம். வியாசரின் முழு பெயர் கிருஷ்ண துவைபாயனர். யார் எழுதினார் என்பது எனக்கு முக்கியமில்லை. கீதை என்ன சொல்கிறது என்பதுதான் எனக்கு முக்கியம்' என்றார் வாயாவி மாமா.

‘எப்படியானாலும் அது பார்ப்பன புத்தகம்தானே? என்றார் பகுத்தறிவு சார்.

‘இல்லை. கிருஷ்ண பகவான் யாதவர். வேதவியாசரின் தகப்பனாரான பராசரர் பிராமணர் என்றாலும், தாய் சத்தியவதி கரிய நிறமுள்ள மீனவப் பெண்தான். நெருப்பில் பிறந்த கரிய நிறமுள்ள திரௌபதியின் பெயர் கிருஷ்ணை. கிருஷ்ணம் என்பது கரிய நிறத்தைக் குறிக்கிறது. கிருஷ்ணை திரௌபதி, கிருஷ்ண துவைபாயன வியாசர், வசுதேவ கிருஷ்ணர் எல்லோருமே கரிய நிறம் கொண்டவர்கள். உங்களது கல்தோன்றி மண்தோன்றா காலத்து முன் தோன்றிய மூத்த குடியைச் சேர்ந்தவர்கள்தான். இப்போது சந்தோஷமா?’ என்றார் வாயாவி மாமா.

‘எனக்கு தெரியாமல் போய்விட்டது. நம் முன்னோர்கள் எதையும் ஒழுங்காக எழுதி வைக்காததுதான் பிரச்சனை’ என்ற பகுத்தறிவு சார் சிந்தனைவயப்பட்டார்.

‘எழுதி வைத்ததில் எதைப் படித்து புரிந்து கொண்டு விட்டோம்?’ என்றார் வாயாவி மாமா.

‘சுருதிகளான வேதங்களை மட்டுமே மூலநூல்களாகக் கொள்ள வேண்டும். அதுதான் மரபு’ என்ற அபிராமி பித்தர் திசை மாறிவிட்ட பேச்சை நேர்படுத்தினார். ‘ஜே.கே.விற்கு யோகானுபவங்கள் ஏதும் இல்லையோ?’ என்று கேட்டார்.

‘யோகானுபவம் என்று சொல்லாமல் புதிய வார்த்தைகளால் அவர் தன் அனுபவங்களைப் பற்றி கூறுகிறார். உலகில் எத்தனை தத்துவ மார்க்கங்கள் உண்டோ அத்தனை அகராதிகள் உள்ளனவே?’ என்றேன்.

‘உள்ளன, உள்ளன. ஒவ்வொரு ஞானியும் இப்படிப் புது, புது வார்த்தைகளை புகுத்தினால் சாதகனின் பாடுதான் திண்டாட்டமாகிவிடுகிறது. சங்கரர் ஆதிகாலம் முதல் புழக்கத்தில் இருந்த சொற்களைத்தான் எப்போதுமே பயன்படுத்துகிறார்’ என்றார் அபிராமி பித்தர்.

‘உலகில் இல்லாத ஒன்றை உருவாக்கும்போது, அதை விளக்க புதிய வார்த்தைகளையும் உருவாக்கினால்தான் நன்றாக இருக்கும்,



பழையவற்றிற்கு பழைய வார்த்தைகள் போதும்’ என்றார் வாயாவி மாமா.

‘உள்ளதைத்தான் சொல்கிறீர்கள்’ என்றார் அபிராமி பித்தர். மரபுவாதியாக இருந்தாலும் எதிரான கருத்துகளை காதாரக் கேட்டு, அவற்றில் சிலவற்றை ஏற்கவும் செய்யும் பித்தரின் விவாத நாகரீகப் பண்பு எனக்கு பிடித்திருந்தது.

‘கலிபோர்னியாவில் இருக்கும்போது இருபத்தியேழு வயதில் முதல்முறையாக மூன்று நாட்கள் பேரைக்கியமும், அளவற்ற சாந்தியும் கிடைத்ததாகக் கூறுகிறார். பின் வாழ்நாள் முழுவதும் அடிக்கடி அந்த அனுபவம் கிடைத்ததாக கேள்வி. அந்த அனுபவம் என்னவாக இருக்கும்?’ என்றேன்.

சிறிது நேரம் மௌனமாக இருந்தார் அபிராமி பித்தர். பின் ‘அவர் அனுபவம் அவருக்கு அந்தரங்கமானது. அதை நாம் விளக்க முயல்வது அறியாமை. அவரே விளக்கினாலும் நமக்கு அது தெளிவாகப் புரியாது. இந்த அனுபவங்கள் வார்த்தைகளுக்கு வசப்படாதவை’ என்றார்.

‘உண்மை’ என்றார் வாயாவி மாமா.

‘நான் சிறிது காலம் அவர் எழுதியவற்றை வாசித்து வந்தேன். ஆனால் ஏனோ தெளிவு பிறக்கவில்லை. எவரையும் பின்பற்றாதே என்று அவர் சொல்லியிருப்பதே எனக்கு தடையாகி விட்டது போலும். பின் வேறு பாதையில் போக ஆரம்பித்து விட்டேன். எது என் பாதை என்பது இன்னும் தெளிவாகவில்லை’ என்றேன்.

‘தத்துவ மார்க்கம் எல்லோருக்கும் ஏற்றதாக இருக்கும் என்று சொல்ல முடியாது. பக்தி மார்க்கம் எளிமையானதாக இருக்கும்’ என்றார் அபிராமி பித்தர்.

‘பெரியவர் என்ன ஆனார்?’ என்று கேட்டார் வாயாவி மாமா.

‘பெரியவரை அவரது வீட்டிற்கு பத்திரமாக அழைத்துச் சென்று சேர்த்தேன். என் நாடோடி வாழ்க்கையைப் பற்றி கேட்டு தெரிந்து கொண்டார். தன்னோடு கொஞ்ச நாட்கள் இருக்கச் சொன்னார். தங்க இடமும், உண்ண உணவும் இலவசமாகக் கிடைத்தால் வேண்டாம் என்றா சொல்லப் போகிறேன்! பெரியவர் ஒரு மாதத்திற்குள் நன்றாக நடமாட ஆரம்பித்து விட்டார். அவரது

தொழில் விழாக்களுக்கு சமைப்பது, ஒரு வருடம் அவர் கூடவே இருந்து நன்றாக சமைக்க கற்றுக் கொண்டேன். அதன்பின் அவரே எனக்கு பல பெரிய வாடிக்கையாளர்களை அறிமுகம் செய்து வைத்து, சொந்தமாக தொழில் நடத்த உதவினார். இன்று சொந்த வீடு, சிறிய கார் என்று சௌகரியமாக ஒரு குறையும் இல்லாமல் இருக்கிறேன்' என்றேன்.

'அது என்ன உங்கள் பெயருக்கு முன்னால் பிசிபேளா?' என்று கேட்டார் பகுத்தறிவு சார்.

'சில சமயங்களில் நம்மேல் பிரியம் கொண்டவர் ஏதேனும் ஒரு சிறப்பு பெயரை நமக்கு கொடுத்து விடுகிறார். அந்த நேரத்தில் அவர் நாக்கை மகாசரஸ்வதி ஆசிர்வதித்து விடுவதால் சிறப்பு பெயரே நிலைத்து விடுகிறது. நான் சமைத்த பிசிபேளாபாத்தை முதல் முறையாக சாப்பிட்ட சின்னம்மா 'பிரமாதம். இனிமேல் உங்களை பிசிபேளா பிரசாதப்பா என்றுதான் அழைக்கப் போகிறேன்' என்றார். அன்றிலிருந்து நான் பிசிபேளா பிரசாதப்பா ஆகிவிட்டேன். என் தொழிலுக்கு அந்தப் பெயர் சாதகமாகத்தான் இருக்கிறது' என்றேன்.

அபிராமி பித்தரும், பகுத்தறிவு சாரும், வாயாவி மாமாவும் புன்னகைத்துக் கொண்டனர்.

'அக்கா, கொஞ்சம் காலை நகர்த்திக் கொள்ளுங்கள்' என்று சின்னம்மாவிடம் கூறிய எட்டு வயதிருக்கும் ஒரு சிறுவன் நாற்காலிகளுக்கு அடியே வைக்கப்பட்டிருந்த காலிக் கோப்பை- களை எடுத்து தன்னிடமிருந்த பிளாஸ்டிக் வாளியில் போடலானான். குழந்தைமை சிறிதும் மாறாத கண்கள், முகம். எக்கவலையுமில்லாமல் படித்து, விளையாடி, வளர வேண்டிய வயது.

சின்னம்மா அணிந்திருந்த இத்தாலியிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட புதுவகையான காலணிகளைப் பார்த்ததும், 'ஹை!' என்று கண்களை விரித்துக் கூறினான். ஒரு காலணியை கையில் எடுத்து தொட்டுத் தடவிப் பார்த்தான்.

சின்னம்மாவின் கண்களில் நீர் தளும்பியது.



## 11. பவித்திரனின் பார்வை

மனித வாழ்வில் கணந்தோறும் மோதிக் கொண்டே இருக்கும் முரண்களை தத்துவ நோக்கு சரி செய்து விடும் என்கிறார்கள். தத்துவ நோக்குகளே முரண்பட்டு மோதும்போது எவ்வழியில் செல்வது என்ற திகைப்பு ஏற்படுகிறது. அடுத்தவர் வாழ்வதற்காக தன்னையே தருவது அதிர்ஷ்டம் என்பது ஒரு கருத்து. அடுத்தவர் வாழ்க்கையில் குறுக்கிடுவது அவரது கர்மத்தை நம்மை ஏற்க வைக்கும் துரதிர்ஷ்டம் என்பது மற்றொரு கருத்து. எட்டு வயது குழந்தை கூலிக்கு வேலை செய்வதை மாற்ற முயற்சிப்பதை தன்னலம் கருதாத நல்ல காரியம் என்பதா? அல்லது அக்குழந்தையின் கர்மத்தில் குறுக்கிடும் தகாத காரியம் என்பதா? அப்போது அகந்தையற்று, பற்றற்று எதையும் செய்யலாம் என்றொரு கருத்து எதிர்பாராத திசையிலிருந்து வரும்.

என் நண்பர்களான தத்தா, வம்சி, சந்துருவோடு தத்துவம் பேசுவது ஒரு காலத்தில் நல்ல பொழுதுபோக்காக இருந்தாலும், என்னால் அவர்களைப் போல வாழ்வில் தத்துவங்களை கண்டறிய முடியவில்லை. பொறுமையில்லை அல்லது அக்கறையில்லை என்றும் சொல்லலாம். என் இயல்பிற்கு, சுபாவத்திற்கு ஒத்து வரும் சில அறங்களை, நெறிகளை மட்டும் என் வாழ்வில் ஏற்றுக் கொண்டேன். என்னால் முடிந்த அனைத்தையும், அனைவருக்கும் செய்வேன். இருப்பதை பிறருக்கு தடையின்றித் தருவேன். கொடுப்பது எதற்கும் கணக்கு வைத்துக் கொள்வதில்லை. பேதம் பாராட்டுவதில்லை. என் வாழ்வு நதியில் காலநீரோட்டம் தடை- யற்று நகர்ந்து கொண்டிருக்கிறது.

வாத்சல்யாவைக் கண்டதும் நலம் விசாரிப்பதற்காக அவளருகே சென்றேன். அப்போது ஒரு சிறுவன் அவளது காலணியைத் தொட்டு விட்டு சிரிப்பதையும், வாத்சல்யாவின் கண்களில் நீர் தளும்பியதையும் கண்டேன். என் மனமும் தீத்தழல் தீண்டிய மெழுகென உருகியது.

அழுக்குசட்டை போட்டிருந்த அவன் தோள்களில், மின்னும் வைரவளையல்கள் அணிந்த தன் கைகளை வைத்து 'தம்பி, உன் பெயரென்ன?' என்றாள் வாத்சல்யா.

‘சின்ன பையன்’ என்றான் சிறுவன்.

‘உன் நிஜபெயர்?’ என்று கேட்டாள் வாத்சல்யா.

‘எல்லோரும் என்னை அப்படித்தான் கூப்பிடுவார்கள்’ என்றான் சின்ன பையன்.

முரட்டுத்தனமான தோற்றம் கொண்ட ஒரு மனிதர் வாத்சல்யா அருகே வந்து பணிவுடன் நின்றார். ‘அம்மா, பையன் ஏதாவது தப்பு செய்து விட்டானா?’ என்றவர், வரவழைத்துக் கொண்ட கோபத்துடன் கண்களை சுருக்கி சிறுவனை முறைத்தார்.

சின்ன பையன் பின்னகர்ந்து வாத்சல்யாவை அடைக்கலம் புகுவது போல ஒட்டி நின்றான்.

‘அவன் எதுவுமே செய்யவில்லை. நல்ல பையன். நீங்கள் யார்?’ என்றாள் வாத்சல்யா.

‘நான் இந்த மண்டப நிர்வாகி. சின்னபையன் இங்கேதான் ஒரு வருஷமாக வேலை பார்க்கிறான்’ என்றார் மண்டப நிர்வாகி.

‘இவனை பள்ளிக்கூடத்திற்கு அனுப்பவில்லையா?’ என்று கேட்டாள் வாத்சல்யா.

புரியாமல் விழித்தார் மண்டப நிர்வாகி. ‘அதை இவன் தகப்பன்தானே செய்ய வேண்டும்? மொத்தமாக ஒரு தொகையை வாங்கிக் கொண்டு பையனை வேலைக்கு விட்டுவிட்டுப் போய் விட்டான்’ என்றார்.

‘பாவமாக இருக்கிறது’ என்றாள் வாத்சல்யா.

‘ஆமாம் அம்மா. அதனால்தான் நாங்கள் வேலைக்கு வைத்திருக்கிறோம். சாப்பாடு போட்டு தூங்க இடம் தந்து வளர்க்கிறோம். பெற்றவர்களோடு இருந்தால் எதுவுமில்லாமல் கஷ்டப்பட்டிருப்பான். இங்கு வந்ததால் சுகமாக ராஜ வாழ்க்கை வாழ்கிறான்’ என்றார் மண்டப நிர்வாகி.

சிறிது யோசித்த வாத்சல்யா ‘இன்று மட்டும் இவன் என்கூடவே இருக்கட்டும் எனக்கு சின்ன சின்ன வேலையெல்லாம் செய்ய இவன் தேவைப்படுகிறான்’ என்றாள்.



‘குப்பையெடுக்க நான்கு பையன்கள்தான் இருக்கிறார்கள். ஒரு கை குறையுமே என்றுதான் யோசனையாக இருக்கிறது’ என்றார் மண்டப நிர்வாகி.

‘எதையும் யோசிக்காதீர்கள். இவனது ஒரு நாள் சம்பளத்தை நான் தந்து விடுகிறேன்’ என்று கூறி ரூபாய் நோட்டு ஒன்றை நிர்வாகியிடம் நீட்டினேன். அது எப்படியும் பையனின் ஒரு வார சம்பளமாக இருக்கும். ஒரு மாத சம்பளமாகக் கூட இருக்கலாம்!

அப்போதுதான் என்னை கவனித்த வாத்சல்யா ‘அண்ணா’ என்று பிரியத்துடன் அழைத்தாள்.

‘இதெல்லாம் எதற்கு?’ என்று கூறிக் கொண்டே பணத்தை வாங்கிக் கொண்ட நிர்வாகி, ‘டேய், அம்மா சொல்லும் வேலைகளை ஒழுங்காகச் செய்’ என்று மிரட்டிவிட்டுச் சென்றார்.

நடந்தது என்ன என்று புரியாமல் விழித்தான் சின்ன பையன்.

‘சின்னபையா, போய் வாளியை வைத்து விட்டு வா’ என்றாள் வாத்சல்யா.

‘குப்பை எடுக்க வேண்டுமே’ என்றான் சின்ன பையன்.

‘இன்று உனக்கு விடுமுறை’ என்றாள் வாத்சல்யா.

‘அப்படி என்றால்?’ புரியாமல் கேட்டான் சின்ன பையன்.

‘நீ இன்று வேலை பண்ணாமல் விளையாடலாம் என்று அர்த்தம்’ என்றாள் வாத்சல்யா.

மிரண்டான் சின்னபையன். ‘சார் அடிப்பாரே. சாப்பாடு கிடைக்காதே’ என்றான்.

‘யாரும் அடிக்க மாட்டார்கள். நான் சாப்பாடு தருகிறேன். போய் வைத்து விட்டு வா’ என்றாள் வாத்சல்யா.

சின்ன பையன் அப்பால் சென்றதும் ‘இவனுக்கு ஏதாவது செய்ய வேண்டும்’ என்றாள்.

‘அவசியம் செய்ய வேண்டும். ஆனால், தனி ஆளாக எத்தனை பேரை காப்பாற்றுவீர்கள்?’ என்று கேட்டேன்.

‘வசதியான ஒவ்வொருவரும் வசதியில்லாத ஒரு குழந்தையை வளர்த்தால்?’ என்றாள் வாத்சல்யா.

‘வீட்டிற்கு ஒரு மரம் வளர்க்க வேண்டும் என்று அரசாங்கம் சொல்வது போலவா? நீங்கள் வேண்டுமானால் செய்வீர்கள். மற்றவர்களது மனம் அந்த அளவிற்கு விரிந்து விடவில்லை’ என்றேன்.

‘தீர்வு எதுவுமில்லையா?’ என்று கேட்டாள் வாத்சல்யா.

‘இது சமூக பிரச்சனை. தனிமனித பிரச்சனை தீர தனிமனிதன் மட்டும் மாறினால் போதும். சமூக பிரச்சனை தீர சமூகமே மாற வேண்டும். அல்லது சமூகத்தைவிட வலிமையானவன், பெரியவன் பொறுப்பேற்று மாற்ற வேண்டும்’ என்றேன்.

‘நான் செய்யக் கூடியது என்ன?’ என்று கேட்டாள் வாத்சல்யா.

‘உங்களால் முடிந்ததை செய்கிறீர்கள்’ என்றேன்.

‘வேறொன்றும் செய்ய முடியாதா?’ என்று கேட்டாள் வாத்சல்யா.

‘உங்களிடம் சமூகத்தை மாற்றும் வலிமையில்லை என்றால் சமூகத்தை மாற்றக் கூடியவருக்கு துணையாக, உதவியாக இருக்கலாம்’ என்றேன்.

‘வம்சிக்கு அந்த வலிமை உண்டுதானே?’ என்று ஆர்வத்-துடனும், பிரியத்துடனும் கேட்டாள் வாத்சல்யா.

‘அவன் விரும்பினால் அந்த வலிமையை பெற முடியும். ஆனால் அவன் கவனம் அதில் இல்லையே? உங்களைத் தவிர வேறெதையும் அவன் நினைப்பதே இல்லையே’ என்றேன்.

சிறிதுநேரம் மௌனமாக இருந்த வாத்சல்யா ‘நீங்கள் எப்போது கல்யாணம் செய்து கொள்ளப் போகிறீர்கள்?’ என்று கேட்டாள்.

திகைத்தேன். என் திருமணத்தைப் பற்றி நான் ஒருமுறை கூட யோசித்தது இல்லை. பல நண்பர்களின் காதல் திருமணங்களில் கல்யாண செலவை செய்து, பதிவாளர் அலுவலகத்தில் சாட்சிக் கையெழுத்து போட்டிருக்கிறேன். ஆனால் எவரும், என் வீட்டுப் பெரியவர்கள்கூட, என் திருமணத்தைப்பற்றி பேச்செடுத்த-தில்லை.

‘உங்கள் ஆசிர்வாதத்தில் பெண் கிடைத்தால் பண்ண வேண்டியதுதான்’ என்றேன்.



‘எப்படிப்பட்ட பெண் வேண்டும் உங்களுக்கு?’ என்றாள் வாத்சல்யா.

‘கற்பனை செய்வது போலா பெண் அமையப் போகிறாள்? என் தகுதிக்கு ஏற்ற பெண் யாரென்று கணக்குப் பிள்ளைக்குத்தான் தெரியும்’ என்றேன்.

‘அவர் யார்?’ என்றாள் வாத்சல்யா.

‘திருவாளர் வாழ்வுதான். எல்லோருடைய கணக்கையும் துரும்பு குறையாமல் கச்சிதமாகப் பதிந்து வைத்திருப்பாரே’ என்றேன்.

சிரித்தாள் வாத்சல்யா. ‘அப்படியானால் உங்களுக்கு வரப்போகும் பெண் எப்படிப்பட்டவள் என்று இப்போதே எனக்குத் தெரிந்து விட்டது’ என்றாள். விரிந்தபடியிருக்கும் மனம் கொண்ட பெண் வாத்சல்யா. எல்லோரிடமும் பெரிய மனதோடுதான் பழகுவாள்.

சின்ன பையன் திரும்பி வந்தான்.

‘டிரைவரண்ணாவோடு இவனை அனுப்பி வைக்கப் போகிறேன். புதிய உடை வாங்கி அணிந்து கொண்டு, நன்றாக விளையாடி விட்டு, நட்சத்திர உணவுவிடுதியில் சாப்பிட்டு வரட்டும்’ என்றாள் வாத்சல்யா.

‘நான் அழைத்து கொண்டு போய் டிரைவரிடம் விடுகிறேன்’ என்று கூறி பையனை வாத்சல்யாவின் காருக்கு அழைத்துச் சென்றேன்.

டிரைவரிடம் பணத்தைத் தந்து விஷயத்தை சொல்லிக் கொண்டிருந்தபோது தரங்கிணி வந்தாள். அவளது முகம் சோர்ந்-திருந்தது. அத்தைப் பிள்ளையின் நிச்சயதார்த்தத்தில் ஓடியாடி வேலை செய்த களைப்பு. ஏனிவள் தத்தாவை நிராகரித்தாள்? பெண்களின் உணர்ச்சிகள் வேகமாக மாறக் கூடியவைதான். ஆனால் இப்படியெல்லாமா மாறவேண்டும்?

எனக்கு அமையும் மனைவி எப்படிபட்டவளாக இருப்பாளோ! அவள் எப்படி வேண்டுமானாலும் இருந்து விட்டுப் போகட்டும். நான் நல்ல கணவனாக, நல்ல காதலனாக, நல்ல ஆண்மகனாக, நல்ல மனிதனாக இருந்து அவளுக்கு நிறைவான வாழ்வை தந்துவிட்டுப் போகிறேன்.

‘யாரிவன்?’ என்று கேட்டாள் தரங்கிணி.

‘வாத்சல்யாவின் புதிய தத்துபிள்ளை சின்னபையன்’ என்றேன்.

சிரித்தாள் தரங்கிணி.

அவனைப் பற்றி சுருக்கமாகச் சொன்னேன்.

‘இப்படிச் செய்தால் வசதிகளை நினைத்து நாளை ஏங்க மாட்டானா? வாத்சல்யா இதையெல்லாம் யோசிக்க வேண்டாமா?’ என்றாள் தரங்கிணி.

‘முதலில் நானும் இப்படித்தான் நினைத்தேன். அப்புறம் வசதி-களை அடைய வேண்டும் என்ற ஆர்வம் இவனிடம் உண்டாக இது ஒரு வாய்ப்பு என்று தோன்றியது. வசதிகளைப் பற்றி அறிந்தால்-தானே அவற்றை அடைவதற்கான ஆர்வமும், வேகமும் உண்டாகும்?’ என்றேன்

‘அப்பா, அம்மாவை விட்டு இருக்க கஷ்டமாக இல்லையா சின்னபையா?’ என்று கேட்டாள் தரங்கிணி.

‘கஷ்டமாகத்தான் இருக்கும். ஆனால், சரி செய்து கொள்வேன்’ என்றான் சின்ன பையன்.

‘எப்படி?’ என்று கேட்டாள் தரங்கிணி.

‘வருத்தமாக இருக்கும்போது அம்மா என்னோடு பேசியது, விளையாடியது, ஊட்டியது என்று நடந்த எல்லாவற்றையும் திரும்பத்திரும்ப நினைத்துக் கொண்டே இருப்பேன். கஷ்டம் போய்விடும். சந்தோஷமாக இருக்கும்’ என்றான் சின்ன பையன்.

‘யாரிதை சொல்லிக் கொடுத்தார்கள்?’ என்று கேட்டாள் தரங்கிணி.

‘யாருமில்லை. நானேதான் கண்டுபிடித்தேன்’ பெருமையுடன் சொன்னான் சின்னபையன்.

சிறிது நேரம் பேச்சற்று நின்றாள் தரங்கிணி.

கார் சின்ன பையனை ஏற்றிக் கொண்டு நகர்ந்தது.

‘ராதைக்கு இருந்த அறிவு எனக்கில்லை. இந்த சின்னபையனுக்கு இருக்கும் அறிவும் எனக்கில்லை’ என்று தரங்கிணி முணுமுணுப்பது போலிருந்தது.



‘என்ன?’ என்று தெளிவுபடுத்திக் கொள்ள கேட்டேன்.

‘சின்னபையன் எத்தனை அழகாகப் பேசுகிறான்!’ என்றாள் தரங்கிணி.

‘குதர்க்கம் இல்லாத குழந்தைமனம் இருந்தால் சொல்வ-தெல்லாமே சத்தியமாகத்தான் இருக்கும். இதுவரை நமக்கு பயன் தந்தவற்றை இருத்திக் கொண்டு, பயனற்றவைகளை விலக்கி, மாறி வளர்ந்து உயர்வதுதான் பரிணாமம். உலகில் எல்லாமே பரிணாமத்திற்கு உட்பட வேண்டும் என்பது கடவுளின் கட்டளை. கடந்த காலத்தை ஆராய்ந்தால்தான் எவை பயன் தந்தவை என்பது தெரிய வரும். மொழி, அறிவியல், சமூகம், வரலாறு என்று எதிலிருந்து வேண்டுமானலும் பாடம் கற்றுக் கொள்ள முடியும். வரலாற்றை எதற்குப் படிக்கிறோம்? அதிலிருந்து அறிய வேண்டிய பாடங்களை அறிந்து கொண்டு மனிதர்கள் மாறினால் எதிர்கால மனித வாழ்க்கை செழிப்பானதாகிவிடும் என்பதால்தான். வலிமை உள்ளவன் போரிடாமல் இருந்தால், செழிப்பான சாம்ராஜ்யத்தை உருவாக்க முடியும் என்று சாம்ராட் அசோகன் மூலம் அறிகிறோம். அணு ஆயுதங்கள் அவசியமற்றவை என்பதை நாகசாகி, ஹிரோஷிமா மூலம் கற்றுக் கொள்கிறோம். பொருளாதார பலமிருந்தால் உலகை ஆளமுடியும் என்பதை பிற நாடுகள் அமெரிக்காவைப் பார்த்து அறிந்து கொள்ளலாம். எத்தனையோ பாடங்கள் இருந்தாலும் சின்னபையன் அன்பு என்ற பாடத்தை மட்டும் படித்து விட்டான் போலிருக்கிறது. அம்மாவின் அன்பை மட்டும் இருத்திக் கொண்டு, அவள் செய்த தவறுகளை மறந்துவிட்டான். கஷ்டத்தை சந்தோஷமாக மாற்றிக் கொள்ள கற்றுக் கொண்டுவிட்டான். நாமும் நம் சொந்த வாழ்க்கையை, கடந்து போனவற்றை நினைத்துப் பார்த்து குழந்தை மனதோடு பாடம் கற்றுக் கொண்டால், எதிர்காலம் சந்தோஷமாக இருக்கும்’ என்றேன்.

பேசும்போது என் குரல் ஒலிபெருக்கி மூலம் எனக்கே கேட்பது போலிருந்தது. மண்டபத்திலிருந்த பலரும் என்னை பார்ப்பது போலிருந்தது. என்ன நடக்கிறது? சற்று குழப்பத்துடன் சுற்றிலும் பார்த்தேன். என் பக்கவாட்டில் மண்டப நிர்வாகி மைக் ஒன்றோடு போராடிக் கொண்டிருந்தார். ‘நன்றாகத்தானே வேலை பார்க்கிறது.

மூன்றடி தள்ளி நிற்கும் உங்கள் குரலையே தெளிவாக ஒலி பெருக்குகிறது. வாத்தியக்காரர் இதில் எதை சரி செய்யச் சொல்கிறார்?' என்று என்னிடம் முறையிட்டார்.

என்னையே சிறிதுநேரம் பதில் பேசாமல் பார்த்துக் கொண்டிருந்த தரங்கிணி புன்னகைத்து விட்டு நகர்ந்தாள். மெல்ல தரங்கிணியின் முகச்சோர்வு விலகுவது போலவும், அது பிரகாசமடைவது போலவும் தோன்றியது.

அப்போது நடக்க சிரமப்பட்ட ஒரு பெரியவர் என்னை நெருங்கி 'இது நிச்சயதார்த்த நிகழ்ச்சிதானே?' என்றார்.

'ஆமாம். நீங்கள் தத்தாவிற்கு சொந்தமா, மதுமதிக்கு சொந்தமா?' என்றேன்.

'தத்தாவிற்கு சொந்தம். ஊரை விட்டு வெளிமாநிலம் போய் பல வருடங்களாகி விட்டன. கூட்டத்தைப் பார்த்ததும் கல்யாணம் நடக்கிறதோ என்ற சந்தேகம் என் பெண்ணிற்கு வந்துவிட்டது!' என்றார் பெரியவர். பழைய வேட்டி, சட்டையும், ரப்பர் செருப்பும் அணிந்திருந்தார்.

சற்று தள்ளி அவரது பெண் நின்றிருந்தாள். எத்தனை அழகான பெண்! சிறு அலங்காரம், ஒப்பனை இல்லாதபோதே இத்தனை அழகாக இருக்கிறாள். மிகவும் சாதாரணமான சேலையும், எளிய செயற்கை நகைகளும் அணிந்திருந்தாள். மதுமதி அணிந்திருக்கும் நகைகளைப் பார்த்தால் இவள் மனம் எத்தனை அலைமோதும்! கையில் பெரிய பெட்டி வைத்திருந்தாள். வெளியூரிலிருந்து நேராக மண்டபத்திற்கு வருகிறார்கள் போலிருக்கிறது. விடுதியில் தங்கி வர கையில் பணமிருந்திருக்காது, பாவம்.

அப்பெண்ணை நெருங்கி கையை நீட்டினேன் 'என்னிடம் பெட்டியைக் கொடுங்கள்' என்றேன்.

என் கண்களை ஒருமுறை பார்த்து புன்னகைத்துவிட்டு, தன் தகப்பனாரைப் பார்த்தபடி பெட்டியை என்னிடம் தந்தாள். 'ஏனப்பா இவரை சுமக்க சொன்னீர்கள்?' என்று கேட்டாள்.

'நானெதுவும் சொல்லவில்லையே! அவராகக் கேட்டார், நீயாகத் தந்து விட்டாய்!' என்றார் பெரியவர்.



'அதனால் என்ன? என்னோடு வாருங்கள். தத்தாவின் அம்மாவிடம் அழைத்துச் செல்கிறேன்' என்றேன்.

அப்பெண் மீண்டும் என் கண்களைத் தன் கண்களால் சந்தித்துவிட்டு 'நன்றி' என்றாள். அவள் தொடர்ந்து பேசிக் கொண்டே இருந்தால் நன்றாக இருக்கும் என்று தோன்றியது. எத்தனையோ காலம் பழகியவளின் அருகே நிற்பது போல உணர்வு ஏற்பட்டது.

'நன்றாகப் பேசுகிறார் என்று சொல்லுங்கள் அப்பா. இவரிடம் பேசிக் கொண்டிருந்த பெண் இவரது தங்கை போலிருக்கிறது' என்றாள் பத்மினி.

'சொந்த தங்கை இல்லை என்றாலும் கிட்டத்தட்ட அப்படித்தான். தத்தாவின் மாமாவின் மகள் தரங்கிணி' என்றேன்.

'கௌசல்யாவின் பெண்ணா' என்ற பெரியவர் 'இவள் என் மூத்த பெண். பெயர் பத்மினி' என்றார்.

'அழகான பெயர்' என்று சொன்னபின்தான் அவசரப்பட்டு-விட்டேனோ என்று தோன்றியது.

'அவர் பெயர் என்னவென்று கேளுங்கள் அப்பா' என்றாள் பத்மினி.

'சொல்லிவிடப்பா' என்றார் பெரியவர்.

'என் பெயர் பத்மினி' என்றேன். அவள் களுக்கென்று சிரித்ததும் சுதாரித்துக் கொண்டு 'என் பெயர் பவித்திரன்' என்றேன்.

## 12. பத்மினியின் பார்வை

எத்தனையோ வருடங்கள் கழித்து எவர் மூலமோ மைசூரில் இருக்கும் எங்கள் முகவரியை தெரிந்து கொண்டு மங்களமத்தை நிச்சயதார்த்தத்திற்கு வரச்சொல்லி கடிதம் எழுதி-யிருந்தார். அப்பாவிற்கு சந்தோஷம். 'போயே தீர வேண்டும்' என்றார். மைசூருக்கு வந்தபின் இருபத்தியாறு வருடங்களாக அம்மாவும், அப்பாவும் சொந்த ஊருக்குப் போகவில்லை.

உறவினர்களையும் பார்க்கவில்லை. நான் மைசூரில்தான் பிறந்தேன்.

‘உங்கள் உறவினர்கள் செய்த காரியங்கள் எதுவும் நினைவிருக்-காதே! இருபத்தியாறு வருடங்களுக்கு முன்னால் பணமில்லாத நம்மை கௌசல்யா என்ன பாடுபடுத்தினாள்! நமக்காக மங்களம் ஒரு வார்த்தை ஆதரவாகப் பேசினாளா? உங்கள் அண்ணாவோடு, அவளும் வேடிக்கை பார்த்துக் கொண்டுதானே இருந்தாள்? இவளெல்லாம் ஒரு தங்கைதானா!’ என்று கடந்த காலத்தை நினைத்து கோபித்தார் அம்மா.

‘கௌசல்யாவின் குணம் அப்படி. அவளைப் பகைத்துக் கொண்டால் தனக்கு இருக்கும் வசதியுள்ள ஒரே ஆதரவும் போய்-விடுமே என்று மங்களம் பயந்தாள். அவள் பக்க நியாயத்தையும் பார்க்க வேண்டும்’ என்றார் அப்பா.

‘எந்த சொந்தமும் வேண்டாம் என்று முடிவெடுத்துதானே நீங்களும், நானும் நம்மூரை விட்டு இத்தனை தூரமாக வந்து ஒதுங்கி வாழ்கிறோம்? கடவுளருளால் ஏதோ பிழைத்துக் கிடக்கிறோம். அது பொறுக்கவில்லை உங்கள் சொந்தக்-காரர்களுக்கு! அழைப்பை நேரில் வந்து தந்தாலாவது போவது பற்றி யோசிக்கலாம்’ என்றார் அம்மா.

‘நிச்சயம்தானே செய்கிறார்கள்? கல்யாணப் பத்திரிக்கையை நேரில் வந்து தருவாள் மங்களம்’ என்றார் அப்பா. நம்பிக்கை-யில்லாமல் சிரித்தார் அம்மா.

அம்மா வர மறுத்துவிட்டாள். அண்ணனுக்கு வர முடியாதபடி வேலை ஏதோ வந்துவிட்டது. ‘நான் அப்பாவோடு அவசியம் போயே தீருவேன்’ என்று கூறிவிட்டேன். அம்மாவிற்கு விருப்பமில்லை என்றாலும் அப்பாவின் உடல்நலத்தை மனதில் வைத்துக் கொண்டு நான் போக சம்மதித்தார்.

அப்பா பரணில் பத்திரமாக வைத்திருந்த ஓரங்கள் சிதைந்து வெளிறிப் போயிருந்த பழைய பெட்டியை கீழிறக்கித் துடைத்து அதில் தன் பழைய வேட்டி, சட்டைகளையும், அம்மாவின் பழைய சேலைகளையும் அடுக்கினார்.



கிளம்பும் தினத்தன்று முப்பது வருடத்து பழைய வேட்டி, சட்டையை அப்பா அணிந்ததும், ‘பழையதை விடமாட்டீர்களே’ என்றார் அம்மா.

‘அதிலிருக்கும் சந்தோஷம் உனக்குத் தெரியவில்லை’ என்றார் அப்பா. ‘நான் ஊரிலிருந்து வரும்போது எப்படி வந்தேனோ அது போலவே திரும்பவும் போகப் போகிறேன். பத்மினி, நீயும் உன் அம்மாவின் பழையசேலையை உடுத்திக் கொள். அன்று அவள் போட்டிருந்த கண்ணாடி வளையல்களையும், செயற்கை முத்து மாலையையும் போட்டுக்கொள்’ என்றார்.

அம்மாவின் போன தலைமுறை மோஸ்தரிலிருந்த பழைய சேலையை உடுத்திக் கொள்வது விசித்திரமாக இருந்தாலும், அதிலும் ஒரு திருப்தி இருந்தது. அம்மாவுடையதாயிற்றே!

அப்பா மைசூருக்கு எந்த வழியில் வந்தாரோ அதே வழியில் பேருந்து பிடித்து சிரமப்பட்டு சென்னை வந்தோம், அப்பாவின் உடல் நலத்தை மனதில் கொண்டு ‘வாடகைக்காரில் போய் விடலாமே’ என்றேன். அப்பா பதில் பேசவில்லை. கூட்டம் அதிகமாக இருந்த நகரபேருந்தில் ஏறி பலரிடம் வழி விசாரித்து ஒரு வழியாக மண்டபம் வந்து சேர்ந்தோம். ‘எல்லாமே மாறி விட்டன. ஊர் மாறிவிட்டது. காலம் மாறிவிட்டது. மனிதர்கள் எப்படியோ!’ என்று சொல்லிக்கொண்டே வந்தார் அப்பா.

மண்டபத்திற்குள் நுழையும்போதே கூட்டத்தைப் பார்த்து அசந்து போனேன். இது நிச்சயதார்த்தமா இல்லை கல்யாணமா என்ற சந்தேகம் வந்துவிட்டது. ‘நிச்சயதார்த்தத்திற்கு இத்தனை கூட்டமா?’ என்று வியந்தேன்.

‘பெண் பெரிய இடமாக இருக்கும்’ என்றார்.

‘வேறு எவருடைய கல்யாணமாக இருந்துவிடப் போகிறது. விசாரித்து விட்டு உள்ளே போகலாம் அப்பா’ என்றேன்.

‘உன் அம்மாவைப் போலவே உனக்கும் எதற்கெடுத்தாலும் சந்தேகம்தான். யாரிடமாவது கேட்டு வருகிறேன்’ என்று கூறிக் கொண்டே அப்பா சற்று தள்ளி ஒரு இளம் பெண்ணோடு பேசிக் கொண்டிருந்த வாலிபரை நோக்கி நடந்தார்.

அந்த வாலிபரோ அழகான பெண்ணை பக்கத்தில் வைத்துக் கொண்டு ஒலிபெருக்கியில் தத்துவக் கருத்தைச் சொல்லிக் கொண்டிருந்தார். என்ன மனிதர் இவர்! நன்றாகத்தான் பேசினார். அதன்பின் அப்பாவிடம் பேசியவர் என்னை நெருங்கி வந்து பெட்டியைத் தரச் சொல்லிக் கேட்டார். எதையும் யோசிக்காமல் பெட்டியை அவரிடம் கொடுத்து விட்டு, அவர் பின்னால் நடக்க ஆரம்பித்து விட்டேன். அதற்குள்தான் உடைகள், பணம் எல்லாமே இருந்தன.

அவரோடு பேசிக் கொண்டிருந்த பெண் யாரென்று தெரிந்து கொள்ளாவிட்டால் நிம்மதியாக இருக்க முடியாது என்று தோன்றியதால் அப்பா மூலம் கேட்டுவிட்டேன். 'அவள் எனது தங்கை போல' என்று அவர் தன் வாயால் கூறியதைக் கேட்ட பின்புதான் மனம் பழையபடி நிம்மதி ஆயிற்று. மனைவியைத் தவிர பிற எல்லா பெண்களையும் சகோதரிகளாக நினைக்கும் சினிமா கதாநாயகன் என்ற நினைப்போ! கேட்க நன்றாகத்தான் இருக்கிறது. சொல்லிவிட்டு போகட்டும்.

'அழகான பெயர்' என்று என் பெயரைப் பாராட்டியவர், தன் பெயரை சொல்ல மறந்து என் பெயரை தன் பெயரென்றபோது, வெளியே கேலியாக சிரித்தாலும், இதயத்தில் இதுவரை நானறிந்திராத புதுவகையான இன்பம் பெருகியது.

மங்களமத்தையிடம் எங்களை அழைத்து சென்று இவர் அறிமுகப்படுத்தியதும் அத்தை சிறிது நேரம் பேசமுடியாத அளவிற்கு உணர்ச்சிவசப்பட்டுவிட்டார்.

அண்ணனும், தங்கையும் நலம் விசாரித்து முடித்தபின், என்னை அணைத்துக் கொண்ட அத்தைக்கு என் பழைய சேலையும், கண்ணாடி வளையல்களும் மன சஞ்சலத்தை தந்தன. 'பட்டு சேலையும், நகைகளும் தருகிறேன். அணிந்து கொள்' என்றார்.

நான் சிரித்தேன்.

அப்பா, 'வேண்டாம், அவள் போட்டிருப்பதே போதும்' என்றார்.

'நீ பழையதை நினைத்துக் கொண்டு ரோஷத்தோடு இருக்கிறாய். நாமெல்லாம் ஒரே குடும்பம்' என்றார் அத்தை.



'பணம் குறுக்கே வராவிட்டால் நாம் எப்போதுமே ஒரே குடும்பமாக இருக்க முடியும். நான் வேற்றுமை பாராட்டவில்லை. ஆனால் நகை, புடவையெல்லாம் வேண்டாம்' என்றார்.

ஏன்தான் அப்பா இப்படியெல்லாம் நடந்து கொள்கிறாரோ!

'உன் அம்மா வரமாட்டேன் என்று சொல்லிவிட்டாளாக்கும்' என்று என்னிடம் அத்தை ரகசியமாகக் கேட்டார்.

நான் புன்னகைத்தேன்.

'நீ தரங்கிணியோடு இரு. அவள் நமக்கு வேண்டியவர்களை அறிமுகப்படுத்துவாள்' என்ற அத்தை அவளைத் தேடினார். அவள் எங்கு சென்றாள் என்று தெரியவில்லை.

'நான் போய் தேடுகிறேன்' என்று கூறிவிட்டு மண்டபத்தை சுற்றி வந்தேன். தரங்கிணியின் முகம் எனக்கு நன்றாக நினைவில் இருந்தது.

மாடியிலிருந்த அறைகள் ஒவ்வொன்றாக பார்த்துக் கொண்டிருந்தபோது, ஓர் அறையில் வாலிபன் ஒருவன், கார் பேட்டரி போன்ற ஏதோ ஒன்றை கவனமாக ஆராய்ந்து கொண்டிருந்தான்.

எதிர்பாராமல் அறைக்குள் நுழைந்த என்னை கண்டதும் அவன் பதறிப் போய் தன் கையிலிருந்த பொருளை ஒரு துவாலைக்குள் மறைக்க முயன்றான். அவனது நடவடிக்கை விசித்திரமாக இருந்தது.

'மன்னித்துக் கொள்ளுங்கள். தரங்கிணி என்ற பெண்ணை தேடி வந்தேன்' என்றேன்.

'மொட்டை மாடியில் பாருங்களேன்' என்றான் அந்த வாலிபன்.

'சரி' என்று கூறி அறையை விட்டு நான் வெளியேறியதும், அறைக்கதவை சாத்தி தாளிட்டுக் கொண்டான்.

கீழே நிகழ்ச்சி நடக்கும்போது மொட்டைமாடிக்கு ஏன் தரங்கிணி போகப் போகிறாள் என்று நினைத்துக் கொண்டே 'எதற்கும் ஒருமுறை பார்த்துவிடுவோம்' என்று மொட்டைமாடிக்குப் போனேன்.

கீழிருந்த இரைச்சல் மேலே இல்லை. அமைதியும், அரையிருளுமாக இருந்த மொட்டைமாடியின் தடுப்புச்சுவர் ஒன்றின்மீது சாய்ந்து உட்கார்ந்து கொண்டு, வளர்பிறை நிலவை

தரங்கிணி பார்த்துக் கொண்டிருந்தாள். அவளது சிப்பிக் கண்களில் தோன்றிய நீர்முத்துக்கள் கன்னங்களில் உருண்டோடிக் கொண்டிருந்தன.

அவளது நினைவோடையை தடை செய்ய விரும்பாமல், சத்தமின்றி கீழிறங்கினேன்.

'எங்கே போய்விட்டீர்கள்? முதலில் இதை சாப்பிடுங்கள். களைப்பு தீரும்' என்று கூறிக் கொண்டே கையில் பழரசக் கோப்பையோடு பவித்திரன் வந்தார்.

'நான் களைப்பாக இருப்பதாக யார் சொன்னது? ஒரு வார்த்தை சொன்னால் நானே எடுத்துக் கொள்ள மாட்டேனா? நீங்களே எடுத்துக் கொண்டு வரவேண்டுமா?' என்று கூறிக் கொண்டே அவரது கையிலிருந்த கோப்பையை வாங்கிக் கொண்டேன்.

மேடையில் ஓர் ஓரமாக நாற்காலியின் மீது அமர்ந்திருந்த தத்தாவின் முகத்தில் உற்சாகமே இல்லை. கூட்டத்தில் எதையோ, எவரையோ தேடுவது போல அங்குமிங்கும் பார்த்துக் கொண்டிருந்தார்.

'நேரமாகிறதே, ஆரம்பிக்கலாமா?' என்று கேட்டார் ஒரு பெரியவர்.

'குடும்பத்து பெரியவர்களை மேடைக்கு கூப்பிடப்பா' என்றார் இன்னொரு பெரியவர்.

நடக்கப் போவதை வேடிக்கை பார்க்க விருந்தினர் உற்சாகமாக தயார் ஆயினர்.

(வளரும்)

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

**லேசான பழக்கம், நம்பும் நடத்தையாகி, விடமுடியாத சுபாவமாகி, அதன் திறன் மாறும் பர்சனாலிட்டியாகி, மனிதன் அதனின்றும் மீண்டு வந்து பிரம்மமாகி உலகை ஆள்வான்.**



# பெம்பர்லி நடத்திய டார்சி எலிசபெத் திருமணம்

இராமதாஸ்

எதையும் நம் கண்ணோட்டத்திலிருந்து பார்ப்பதை விட்டு அனந்தனின் கண்ணோட்டம் மற்றும் செயல்பாடுகளின் வெளிப்பாடுகளாகப் பார்க்க வேண்டும். நாம் காணும் காட்சிகள் மரம், செடி, காற்று, வானம், புயல், மழை என ஆயிரம் செயல்களாக அனந்தன் வெளிப்படுகிறான். நாம் காணும் அத்தனை செயல்களும் சூன்யத்தில் சூட்சுமமாக உள்ளன. அங்கு மறைந்திருந்து பிறகு வெளிப்படுகின்றன என்பது தத்துவம். காஷ்மீரில் சங்கராச்சாரியார் குன்றில் பகவான் ஸ்ரீ அரவிந்தர் நடந்து கொண்டிருக்கும்போது முயற்சியின்றி அத்வைத அனுபவம் அவருக்குக்கிட்டியது. நாம் உயிரோடு இருப்பது எவ்வளவு உண்மையோ அவ்வளவு உண்மை ஜடத்துள் தெய்வத்தைக் காண்பது. கர்னுலி என்ற இடத்தில் காளி கோவில் ஒன்றுள்ளது. அங்கு பகவான் சென்றபோது ஜடத்துள் உறையும் தெய்வத்தைக் கண்டார். உயிரற்ற சிலையில் உயிருள்ள தெய்வம் உறைகிறது. சிலையிலிருந்து அம்பாள் உயிர்ப்பெற்று வெளிவந்து தரிசனம் அளித்தது. ஜடப்பொருளுக்கு உயிர் வந்தது போல் அந்த உயிர் அன்புடன் அழைக்கிறது.

இங்கே நாம் கருதும் கற்சிலை பெம்பர்லி மாளிகை. பல வருடங்களாக ஆங்கிலேய பிரபுக்கள் வாழ்ந்த புகழ்பெற்ற அரண்மனை. 200 ஏக்கர் பரப்பளவில் உள்ள பலநூறு அறைகள் கொண்ட மிகப்பெரிய பங்களா. எஸ்டேட் வருமானம் 10000 பவுன். 4000 ஏக்கர் பரப்பளவு உள்ள பெரிய எஸ்டேட். அதன் சுற்றளவு 10 மைல்.

பெம்பர்லிக்கு தற்சமயம் எஜமானி இல்லை. அதன் எஜமானர் விரும்பும் பெண் மனைவியாகி எஜமானியாவாள். எலிசபெத் டார்சியின் திருமணப் **Proposal**-ஐ மறுத்தபிறகு அவளை எப்பாடுபட்டாகிலும் எஜமானி ஆக்கவேண்டும் என்ற நினைப்பு பெம்பர்லிக்கு உள்ளது. ஏனென்றால் அவளை டார்சி விரும்பிக் காதலிக்கிறார்.

டார்சி இல்லாத நேரத்தில் எலிசபெத் பெம்பர்லியின் பிரம்மாண்டத்தை, கம்பீரத்தைப் பார்க்கும் வாய்ப்பு வந்தது. ஜடப்பொருளுக்கு உயிர்வந்தது போல் பெம்பர்லி தன் அழகையெல்லாம் ஒன்று திரட்டி எலிசபெத்தை தரிசிக்க வைத்தது. பிரம்மாண்டத்தைப் பார்த்து அவளுக்கு மூச்சே நின்றுவிட்டது. க்ஷண நேர தரிசனம் அவளை ஆட்கொண்டது. கண்ட காட்சியின் உயர்வைக்கண்டு ‘நான் இந்த அரண்மனைக்கு எஜமானியாக இருந்திருக்கலாம்’ என்று எலிசபெத் நினைக்கிறாள். இழந்த வாய்ப்பு நினைவிற்கு வருகிறது.

பெம்பர்லி என்னவென்று அறியாதவள், பெம்பர்லியைப் பார்த்து மயங்கினாள், ஆச்சரியப்பட்டாள்.

எலிசபெத் இழந்த வாய்ப்பை பெம்பர்லியின் கருணையால் மீண்டும் பெறப்போகிறாள். பெம்பர்லியின் திட்டப்படி, எலிசபெத் காலடி வைத்த பிறகு பென்னட் குடும்பத்தின் 3 பெண்களுக்கும் திருமணம் எவ்வாறு பெம்பர்லியும், டார்சியும் நடத்திவைத்தார்கள் என்று பார்க்கலாம். திருமணத்தை பெம்பர்லி ஒரு கற்பனைத் திட்டம் தீட்டி **(Master Plan)** அதை எவ்வாறு சிறப்பாக செயல்படுத்தியது என்றும் பார்க்கலாம்.

### *உல்லாசப் பயணம் - இன்பச் சுற்றுலா*

**Lake country**-க்கு உல்லாசப் பயணம் **Summer tour** செல்ல மிஸ்டர் கார்டினர், எலிசபெத்தை முன்பு அழைத்திருந்தார். **Summer tour** ஒரு மாத காலம் என்பதால் மிகவும் சந்தோஷத்துடன் ஆவலாக ஆர்வத்துடன் எதிர்ப்பார்த்து இருந்தாள். திடீரென்று மிஸ்டர் கார்டினர் அவர்களுக்கு வேலை வந்து விட்டதால் **tour Lake Country**-க்கு போவதற்கு பதிலாக டார்பிஷயர் போகலாம் என்றும், அதுவும் ஒரு வார காலம்தான் என்றும் கூறிவிட்டார். **Lake Country** போவதற்கு மனம் மகிழ்ந்திருந்த வேளையில் திடீரென்று திட்டம் மாறி டார்பிஷயருக்கு அதுவும் ஒரு வாரம் செல்ல அவள் மனம் அவ்வளவாக விரும்பவில்லை. எப்படிப்பட்ட குழப்பமான, அவமானம், திட்டு போன்ற ஏமாற்றுச் சூழ்நிலைகளிலிருந்தும், சட்டென்று மீண்டு சந்தோஷ சூழ்நிலைக்கு வரும் சுபாவம் உள்ளவள் எலிசபெத். இப்பொழுதும் உடனே மனம்மாறி டார்பிஷயர் போக ஒத்துக்கொண்டாள். டார்பிஷயர் வருவதற்கு



இருந்த மனத்தடைகளை விலக்கி எலிசபெத் பெம்பர்லிக்கு வர இசைந்தது, பெம்பர்லிக்குக் கிடைத்த முதல் வெற்றி.

இந்த **tour** உல்லாசப் பயணமாக பெம்பர்லிக்கு வரவிருக்கும் எலிசபெத்தை மனதார அழைத்து ‘பெம்பர்லிக்கு வாருங்கள். உங்களுக்கு வானமே எல்லையான பிரம்மாண்டத்தைத் தரும் எல்லையில்லாத சந்தோஷத்தைத் தர பெம்பர்லி காத்திருக்கிறது’ என்று சொல்வது போல, மானசீக அழைப்பாக இருந்தது. பெம்பர்லி மட்டும் அழைக்கவில்லை. அதன் எஜமானர் டார்சி, எஜமானி எலிசபெத்திற்காக தன்னை அவள் விரும்பும் அளவுக்கு மாற்றி வருகின்றார். பெம்பர்லியின் கதவுகள் எலிசபெத்திற்காக திறந்து வைக்கப்பட்டிருக்கின்றன. எலிசபெத் வருவாள் என்று கனவிலும் நினைக்க முடியாத நிலை டார்சியின் நிலை.

**Hunsford proposal**-ஐ அவள் மறுத்த சோகத்தில் மூழ்கிவிடாமல் அதிலிருந்து டார்சி மீண்டுவர **Summer tour** மேற்கொள்ள சந்தோஷத்துடனும் மகிழ்ச்சியுடனும் ஒத்துக்கொண்டாள் எலிசபெத்.

எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல் டார்பிஷயர்வரை வர மாமா மாமியுடன் சந்தோஷத்துடனும் மகிழ்ச்சியுடனும் சென்றாள். சந்தோஷம் சர்வபரிகாரம். வாழ்க்கையில் பிரச்சனைகளைப் பார்த்து சிரித்தால், சிரிப்பு பிரச்சனைகளை வாய்ப்புகளாக மாற்றும் சக்தியுடையது. **Cheerful persons** எப்பொழுதும் பிரகாசமாக இருப்பார்கள். **Enjoyment is accomplishment.** சந்தோஷம் சாதிக்கும். மலர்ந்த முகமே மனத்தின் மலர்ச்சிக்கு அடையாளம். எந்தவித எதிர்பார்ப்புகள் ஆதாய மனப்பான்மையின்றி, டார்பிஷயர்க்கு சந்தோஷச் சுற்றுலா சென்றாள் எலிசபெத்.

### *பெம்பர்லியின்* **Master Plan**

டார்சி-எலிசபெத் திருமணம் நடக்க பெம்பர்லி போடும் கற்பனைத் திட்டம்.

திருமணம் நடக்க முடியாத சூழ்நிலையை **Hunsford proposal** உருவாக்கிவிட்டது. தன் கற்பனைத் திட்டத்தில் எந்தத் தவறும் குறையுமில்லாமல் செயல்கள் முழுத்திறமையுடனும், முறைமை-யுடனும் திருமணம் நடைபெற செயல்களைத் திட்டமிட்டு

(**without any lapses and errors and with perfect perfection**-ஆக) திருமண நிகழ்ச்சி முடியும்வரை விடாமுயற்சியுடன் பெம்பர்லி செயல்பட திட்டமிடுகிறது. இதை கற்பனை **Master plan** என்று அழைக்கலாம்.

ஹன்ஸ்போர்டில் டார்சி கொடுத்த திருமணப் **proposal**-ஐ எலிசபெத் மறுத்துவிட்டாள். இருவரும் பிரிந்து விட்டனர். மறுபடியும் இவர்கள் சந்திக்கும், வாய்ப்புகளும், நிகழ்ச்சிகளும், சூழ்நிலைகளும், இடங்களும் இல்லை. பெம்பர்லி, இவர்களை சந்திக்கவைத்து, இருவரையும் திருமணத்தில் இணைக்க முனைந்து முழுமுயற்சியுடன் திறமையோடும், முறைமையோடும் நிகழ்த்தப்போகும் கற்பனைத் திட்டங்கள் என்னவென்று பார்க்கலாம்.

முதலில் எலிசபெத்தை டார்சியுடன் சந்திக்கவைப்பது. அதற்காக எலிசபெத்தை பெம்பர்லிக்கு வரவழைக்க வேண்டும். டார்சியின் எஸ்டேட்டையும், அரண்மனையையும் பிரதாபங்களையும் அவள் பார்க்க வேண்டும், கேட்க வேண்டும். பெம்பர்லிக்கு அவளை வரவழைக்க பெம்பர்லி தேடிக்கண்டுபிடித்த எலிசபெத்திற்கு வேண்டிய பெண் மிஸஸ் கார்டினர். இவரை எலிசபெத்திற்குப் பிடிக்கும். இவர் திருமணத்திற்குமுன் டார்பிஷயரில் வளர்ந்தவர். இவருக்கு பெம்பர்லி பற்றியும் டார்சிபற்றியும் தெரியும். மிஸ்டர் கார்டினர், மிஸஸ் கார்டினர் இவர்களுடன் எலிசபெத் முன்பு **Lake country summer tour** ஒரு மாதகாலம் போக ஒத்துக்கொண்டாள். மிஸ்டர் கார்டினருக்கு வேலை இருந்ததால் **Lake country** போக முடியாது. ஆதலால் அவர்கள் 1 வாரகாலத்திற்கு டார்பிஷயர் போகலாம் என்று மிஸ்டர் கார்டினர் கூறினார். வேறுவழியில்லாததால் டார்பிஷயர் போக எலிசபெத் ஒத்துக்கொண்டாள்.

**Summer tour** என்ற பெயரில் டார்பிஷயருக்கு எலிசபெத்தை வரவழைத்து, டார்சி பெம்பர்லியில் இருந்தால் எலிசபெத் வரமாட்டாள் என்பதற்காக டார்சி பெம்பர்லியில் இல்லாமல் வெளியூர் செல்லவைத்து, அந்தச் செய்தியை எலிசபெத் தங்கியிருக்கும் **Lambton hotel** வேலைக்காரிக்கு, அவள் சகோதரன் பெம்பர்லியின் தோட்டக்காரன் மூலம் சொல்லவைத்த பிறகு, மாமா மாமியுடன் பெம்பர்லிக்கு எலிசபெத் போகிறாள்.



பெம்பர்லியைப் பார்த்து பிரமித்து பரவசப்பட்டு, இந்த அரண்மனைக்கு எஜமானியாகியிருக்கலாம் என்ற நினைப்பு அவளுக்கு ஏற்படுகிறது. அதன்பிறகு பெம்பர்லி அரண்மனைக் காப்பாளர் ரெய்னால்ஸ் அனுமதி பெற்று பெம்பர்லி மாளிகையை மாமா, மாமியுடன் சுற்றிப்பார்க்கிறாள். அந்த சமயத்தில் அங்கு இருக்கும் விக்காம், டார்சி போட்டோக்களைப் பார்வையிடுகிறார்கள். ரெய்னால்ஸ் விக்காம் படத்தைப் பார்த்து இவன் முன்னாள் மானேஜரின் மகன் தறுதலை ஆகிவிட்டான் என்றும் டார்சி, எங்கள் எஜமானர் மிகவும் நல்லவர், இவரைப் போன்ற இனிமையான முதலாளி இல்லை, தன்மையானவர் என்று புகழ்ந்தும் கூறுகிறார். டார்சியைப்பற்றி நல்ல **report** எலிசபெத் மற்றும் மாமா, மாமிக்கு வருகிறது. மாமா, மாமி இருவரும் விக்காமை மோசமானவன் நம்பத்தகுந்தவன் அல்லன் என்றும் ஆனால் டார்சி குணவான் என்றும் எலிசபெத்திடம் தெரிவிக்க, முன்பு ஏற்பட்ட மனமாற்றத்தால் **Hunsford**-ல் டார்சியின் உண்மையான நிலைபாடுகளை அறிந்து மனம்மாறும் நிலை எலிசபெத்திற்கு ஏற்படுகிறது. அந்த நேரம் பெம்பர்லியை விட்டு மூவரும் வெளியில் வரும்பொழுது டார்சி அங்கு வர, டார்சியும் எலிசபெத்தும் எதிர்பாராமல் சந்தித்து அவர்கள் ஆச்சரியமடைகிறார்கள். அந்த நேரம் டார்சி, மனம் மாறிய நிலையில் எதுவும் நடக்காதது போல் அன்பாகவும் பண்பாகவும் எலிசபெத் குடும்பத்தின் நலம் விசாரித்து, மாமா மாமியை தனக்கு அறிமுகப்படுத்த வேண்டுகிறான். அவர்களை அன்புடன் உபசரித்து அவர்களுடன் உரையாடுகிறான். **Lambton Hotel** சென்று தங்கை ஜார்ஜியானாவை எலிசபெத்திற்கு அறிமுகப்படுத்துகிறான். எலிசபெத்துடன், மாமா மாமியை அடுத்தநாள் விருந்துக்கு அழைக்க வருவதாக கூறிச் செல்கிறான். அடுத்தநாள் மாமா மாமி சர்ச்சுக்குப் போனபோது, எலிசபெத் மட்டும் **Hotel**-இல் தங்கி ஜேனிடமிருந்து தாமதமாக வந்த கடிதத்தைப் படிக்கிறாள். கடிதத்தில் லிடியா விக்காமுடன் ஓடிப்போன செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்து சோகமானாள். விருந்திற்கு அழைக்கவந்த டார்சியிடம் லிடியா விக்காம் ஓடிப்போன செய்தியைக் கூறி தான் வருத்தத்தில் இருப்பதாக எலிசபெத் சொல்கிறாள். மறுபடியும் பெம்பர்லிக்கு வரப்போவதில்லை என்று எலிசபெத் டார்சியிடம்

கூறுகிறாள். விருந்திற்கு வரும் சூழ்நிலை இல்லாததால், டார்சி வருத்தத்துடன் போகிறான். மிஸ்டர் பென்னட் செய்தியைக் கேள்விப்பட்டவுடன் இலண்டனுக்கு லிடியா விக்காமை தேடிப்-போகிறார். மாமா, மாமியுடன் எலிசபெத் லாங்பர்ன் திரும்புகிறாள். உடனே மிஸ்டர் கார்டினர் இலண்டன் சென்று லிடியாவைத் தேடுகிறார்.

டார்சி இந்த நிலையில் யாருக்கும் சொல்லாமல் இலண்டன் சென்று விக்காமை கண்டுபிடிக்கப் போகிறார். இதுபோன்ற வேலைகளில் பழக்கமானவர்களை அணுகி, மிரட்டிப் பணம் கொடுத்து விக்காம் லிடியா இருக்கும் விலாசத்தைப் பெறுகிறார். விக்காம் லிடியா தங்கியிருக்கும் இடம் மிகவும் தாழ்ந்த இடம். அங்கு சென்று விக்காமை நேரில் சந்தித்து, கடன்களை அடைத்து, இராணுவத்தில் கமிஷன்டு ஆபீசர் பதவி வாங்கிக் கொடுத்து, லிடியாவிற்கு பாதுகாப்பு, பணம் கொடுத்து டார்சியே முன்னின்று விக்காம் லிடியா திருமணத்தை முடித்து வைக்கிறார். தேடிப்போன மாமா கார்டினரை வைத்து திருமணத்தை நடத்தினார் டார்சி. லிடியாவிடம் இது இரகசியம், தான் நடத்திய திருமணம் என்று எவரிடமும் சொல்லக்கூடாது என்றும் சத்தியம் வாங்கிக் கொண்டார் டார்சி. பிங்கிலி வந்து மறுபடியும் **proposal** கொடுப்பார் என்று ஜேன் எதிர்பாக்கவில்லை. லிடியா திருமணத்திற்குப் பிறகு இலண்டனில் பிங்கிலியை சந்தித்துப் பேசி டார்சி தான் செய்த தடையை விலக்குகிறான். பிங்கிலி ஜேனை திருமணம் செய்ய ஒத்துக் கொள்கிறான். இருவரும் புறப்பட்டு நெதர்பீல்டு வருகிறார்கள். பிங்கிலி மட்டும் ஜேன் வீட்டிற்குச் சென்று அவளைச் சந்தித்து திருமணத்திற்கு **Proposal** கொடுக்கிறார்.

டார்சி எலிசபெத் இருவரின் மாறிய மனநிலையை, ஒருவருக்கொருவர் அறிந்து கொள்ளும் வகையில் லேடி காதரின் இடையில் குறுக்கிட்டு எலிசபெத்திடம் சண்டையிட்டு, அவள் மனநிலையை டார்சிக்கு தெரிவிக்கிறார். அதைக் கேள்விப்பட்ட டார்சி எலிசபெத்தை சந்திக்க லாங்பர்ன் வருகிறார். லாங்பர்ன் வந்த டார்சியுடன் எலிசபெத் பேசி, தன் குடும்பத்திற்காக கஷ்டப்பட்டு திருமணங்களை நடத்தியதற்கு நன்றி தெரிவிக்-கிறாள். டார்சி மீண்டும் தன் மனநிலையில் எவ்வித மாற்றமும் இல்லை என்று தெரிவித்ததும், அவளும் சம்மதம் தெரிவிக்கிறாள்.



பெம்பர்லியின் திட்டப்படி டார்சி எலிசபெத்தை திருமணம் செய்து கொண்டார். இதற்கெல்லாம் உந்துதல் சக்தியாக செயல்பட்டது பெம்பர்லியைப் பார்த்து பிரமித்து இந்த அரண்மனைக்கு எஜமானியாகி இருக்கலாம் என்ற ஆழ்மன-நினைப்பு செயலாக வடிவெடுத்ததாகும். இது தன் எஜமானருக்கும் பெம்பர்லியில் வாழ்ந்தவர்களுக்கும் பெம்பர்லி செய்த சேவை-யாகக் கருதலாம்.

### *பென்னட் குடும்ப மூன்று பெண்களுக்கும் அதிர்ஷ்டத்தைத் தரும் டார்சி நடத்திய திருமணங்கள்*

டார்பிஷயருக்கு மாமா மாமியுடன் எலிசபெத் சந்தோஷத்திற்-காகவும், மனமகிழ்ச்சிக்காகவும் உல்லாசப் பயணம் மேற்-கொண்டாள். எதையும் எதிர்பார்த்து எலிசபெத் போகவில்லை. டார்சியை சந்திக்கும் வாய்ப்பு இருப்பதாக அவளுக்குத் தெரியாது. டார்சி குடும்பத்தினர் பெம்பர்லியில் இல்லை என்பதை உறுதிசெய்து கொண்டு மாமா மாமியுடன் பெம்பர்லி சென்றாள். கடைசியில் பெம்பர்லிக்கு, அதன் எஜமானர் டார்சி விரும்பிய மனைவியாக எலிசபெத் வந்துவிட்டாள். பெம்பர்லிக்கும் எஜமானி கிடைத்துவிட்டார். எலிசபெத் - டார்சி மீண்டும் சந்திக்க வாய்ப்பில்லை என்ற நிலைமை முழுவதும் மாறி பெரிய திருப்பங்கள், இடையூறுகளுக்குப் பிறகு இருவரும் சந்தித்து மனம்மாறி பேசி, கதையில், கடைசியாக நடந்த திருமணம். 50 பவுன் வருமானமுள்ள சிறிய ஜமீன்தார் மகளான எலிசபெத்திற்கு இங்கிலாந்தில் உயர்ந்த அந்தஸ்திலுள்ள 10,000 பவுன் வருமானம் உள்ள டார்சியும் பெம்பர்லி எஸ்டேட்டும் கிடைத்தது. எதிர்பார்ப்பு இல்லாமல் வந்தது. இது எலிசபெத்திற்கு வந்த பேரதிர்ஷ்டம். லிடியா விக்காமைத் தேடிக் கண்டுபிடித்து விக்காமிற்கு எலிசபெத்தின் தங்கை லிடியாவைத் திருமணம் செய்வித்து எலிசபெத் வாழ்க்கையில் அழகன் விக்காம் நுழைய வாய்ப்பு இல்லாமல் செய்தது பெம்பர்லியின் திட்டம்.

விக்காமும் பெம்பர்லியில் பிறந்து வளர்ந்தவன் என்பதால் அவனுக்கும் திருமணம் செய்ய வேண்டிய பொறுப்பு பெம்பர்லிக்கும் எஜமானர் டார்சிக்கும் இருப்பதால் விக்காமை விரும்பும் லிடியாவுடன் அவன் திருமணம் நடைபெறுகிறது.

அவனுக்கு இராணுவத்தில் கமிஷன்டு ஆபீசர் என்ற பெருமையை டார்சி வாங்கிக்கொடுத்தார். எலிசபெத் திருமணத்திற்கு முன்பு டார்சி, பிங்கிலி ஜேனை திருமணம் செய்ய விதித்த தடையை விலக்கி திருமணம் செய்ய அனுமதி கொடுத்து, டார்சியின் ஆசீர்வாதத்தினால் 4000 பவுன் வருமானம் உள்ள பிங்கிலி ஜேனுக்கு கிடைத்தான். எலிசபெத்திற்கு வரும் அதிர்ஷ்டம் ஜேனையும் தொற்றிக்கொண்டது. ஒரு வருடம் கழித்து பிங்கிலி, நெதர்பீல்டை காலி செய்து விட்டு பெம்பர்லிக்கருகில் ஒரு எஸ்டேட் வாங்குகிறார்.

பிரெஞ்சுப் புரட்சியின் வெளித் தோற்றத் தாக்கம் இங்கிலாந்திற்கு வாராமல் டார்சியின் மனதில் ஆன்மீகப் புரட்சியால் திருவுருமாற்றத்தை நிகழ்த்தியது. டார்சியின் கர்வத்தைக் கரைத்து சுயநலமான பிரியத்தை ஏற்படுத்தியது. பெம்பர்லியின் பிரம்மாண்டத்தை கனவிலும், நினைவிலும் நினைக்க முடியாத எலிசபெத் கண்களுக்கு மெய்யாக தரிசனம் தந்து, பெம்பர்லி அரண்மனைக்கு எஜமானியாகிறாள். அவளின் எதிர்பார்ப்பு இல்லாத நிலை அவளை உயர்ந்த பெரிய வருமானம் உள்ள டார்சியை மணக்க வைத்தது - பேரதிர்ஷ்டம்.

பென்னட் குடும்பத்தினர் மூன்று பெண்களுக்கும் திருமணத்தை நடத்தி வைத்தது பெம்பர்லியும், அதன் எஜமானரான டார்சியும்தான். அதுவும் எலிசபெத் பெம்பர்லியை தரிசித்த பிறகுதான் நடந்தது. **P&P** கதையின் விமர்சனர்கள் மிஸஸ் பென்னட்டின் தீவிர ஆர்வம்தான் இந்தத் திருமணங்களை நடத்தியது என்று கூறுவது உண்மை என்றாலும், இந்தத் திருமணங்களை நடத்தியது பெம்பர்லி தன் **Master Plan**-இல் எந்தத் தவறும், எந்த இடத்திலும், யாராலும் நடக்க முடியாதபடி **perfect perfection**-வுடன் திறமையும், முறைமையுடனும் முயற்சியை முடிவுவரை கைவிடாமல் செயல்பட்டதுதான்.

### *ஜடமான பெம்பர்லி நடத்திய சத்திய ஜீவிய சக்தி செயல்பட்ட திருமணம்.*

மூன்று திருமணங்கள் நடந்ததை அறிந்து மிஸஸ் பென்னட் வாயடைத்துப் போனார். லேடி காதரீன் கோபம் அடங்க நாளாயிற்று. கரோலின் தலைகீழாக மாறிவிட்டாள். ஜார்ஜியானா



எலிசபெத்தை ஏற்றுக் கொண்டாள். கார்டினர் குடும்பத்தினர் பெம்பர்லி விரும்பும் விருந்தாளிகள் ஆனார்கள். கிட்டி, ஜேன் - மற்றும் எலிசபெத்துடன் நாட்களைக் கழிக்கிறார்கள். அடிக்கடி பென்னட் எலிசபெத்தைப் பார்க்க வருகிறார்.

மூன்று திருமணங்கள் நடைபெற்ற விதமும், அதன்பின் ஏற்பட்ட மாற்றங்களும், சத்திய ஜீவிய சக்தியின் வெளிப்பாட்டை விளக்குவதாக அமைந்துள்ளன.

### *எலிசபெத்திற்கு சத்திய ஜீவியமாக வந்தார் - டார்சி*

**P&P** கதையின் ஆசிரியர் **Jane Austen** அவர்களுக்கு சத்திய ஜீவியத்தின் சாயல் இருப்பதாக, **P&P Commentary**-இல் ஸ்ரீ கர்மயோகி அவர்கள் கூறியுள்ளார். அவர் மலர்ந்த ஜீவிய மாத இதழ்களில் **P&P** கதையில் வெளிப்படும் சத்திய ஜீவிய சக்தியை யோக வாழ்க்கை விளக்கங்கள் என்ற தலைப்பில் பல்வேறு இடங்களில் குறிப்பிடுகிறார். இந்தக் கதையில் டார்சி, எலிசபெத் திருமணம் பெம்பர்லி நடத்திய திருமணம் என்று இந்தக் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளோம்.

யோக வாழ்க்கை விளக்கம்-**V** - செய்தி 978 (மலர்ந்த ஜீவியம் மே-2010 பக்கங்கள் 48-50) 'பரிபூரணத் திறமையும், முறைமை-யும் நல்லசெயலைச் சூழுமானால் ஜடம் உயர்ந்து சத்திய ஜீவியத்தை எட்டும்.' திறமையும் முறைமையும் சத்திய ஜீவியத்தை சாதிக்கும் என்ற ஸ்ரீ கர்மயோகி அவர்களின் விளக்கத்தை அவர் மொழியில் எழுதப் பிரியப்படுகிறேன்.

பகவான் **The Life Divine**-இல் முதல் அத்தியாயத்தில் சத்திய ஜீவியத்தை எட்ட நாம் செய்ய வேண்டியதை - 'முயற்சியை முடிவு வரை கைவிடக் கூடாது' - கூறுகிறார்.

ஆமையும், முயலும் என்ற சிறு குழந்தைகட்கான கதை விடாமுயற்சியைக் கூறுகிறது. 30,000 வருஷத்தில் மனிதன் பெறக்கூடிய சத்திய ஜீவியத்தை இந்த ஜென்மத்தில் பெற விடாமுயற்சி மற்ற குறைகளின்றி இருந்தால் போதும்.

திறமை சாதிக்கும், பெரிய அளவு சாதிக்கும். திறமை மட்டும் முழுமையாகச் சாதிக்காது. முறைமை அவசியம். அதுமட்டும் பூரணமாகச் சாதிக்காது. இவையிரண்டும் பூரணமானால்

நல்லதையும் சாதிக்கலாம், கெட்டதையும் சாதிக்கலாம். யோகம் சத்திய ஜீவியத்தை இம்முறையால் எட்டும்.

நமக்குப் பிரச்சனை எழுந்தால் பிரார்த்தனையால், சமர்ப்பணத்-தால் தீர்க்கிறோம்.

இது பிரச்சனை தீரவும், வாய்ப்பு பலிக்கவும் உள்ள முறை.

பிரார்த்தனை பிரச்சனையைத் தீர்த்தால், மீண்டும் பிரச்சனை வருவதைப் பிரார்த்தனை தடுக்காது.

இம்முறை தடுக்கும்.

ஒரு காரியத்தை இம்முறையால் செய்தால் பிரச்சனையை விலக்கி, வாய்ப்பைப் பூர்த்தி செய்யும்.

பிரச்சனை விலகுவது வெற்றி - முதல்நிலை.

பிரச்சனை விலகுவதால் ஒரு வாய்ப்பு எழுவது - இரண்டாம் நிலை வெற்றி. சூட்சும சக்தி செயல்பட்டால் இது நடக்கும்.

பிரச்சனை விலகி பிரம்மாண்டமான வாய்ப்பு எழுவது - முடிவான மூன்றாம் நிலை.

இது காரண லோகம் (**Causal plane**, சத்திய ஜீவியம்) செயல்படுவது.

ஜேன் திருமணத்தில் பிரச்சனை எழுந்து தீர்ந்தது. அதுவே எலிசபெத் நாடியது.

அவள் முயற்சியில் தவற்றைக் கைவிட்டு, சரியானதை ஏற்க முயன்றாள்.

விக்காம் கூறிய பொய்யைக் கைவிட்டு டார்சி கூறிய மெய்யை ஏற்றாள்.

இது உணர்விலிருந்து மனத்திற்குப் போகும் பரிணாமமுறை. இதனால் சூட்சுமத்தைக் கடந்த காரணலோக சக்தி செயல்பட்டது.

100 பவுன் சம்பாதிக்கும், பொய்யான தறுதலை விக்காமை மணக்க முயன்றவளுக்கு 10,000 பவுன் வருமானமுள்ள பெரிய மனிதன் வரனாக வந்தான்.

அவள் மனம் நல்லது. மனதில் தோன்றியதை முடிக்கும் முழுத்திறமையும் எலிசபெத்திற்கு இருந்தது.

முறைகளை முழுமையாகப் பின்பற்றினாள். தனக்கென திருமணத்தையும் நாடவில்லை.



ஜேனுக்கு அவள் விருப்பப்படி மணம் முடிந்ததும், அத்துடன் தனக்கு சத்தியஜீவியமாக டார்சி வந்ததையும் கண்டாள்.

*எலிசபெத்திற்கு டார்சி சத்தியஜீவியம்.*
*அன்பருக்கு பெரிய, திரண்ட பிரம்மாண்டமான செல்வம்*
*சத்திய ஜீவியம்.*

நாம் செய்யும் எந்த நல்ல செயலும் திறமையும், முறைமையும் குறையாமல் விடாமுயற்சியுடன் செய்தால், அது சத்திய ஜீவிய-மாக பலிக்கும். திரண்ட பெரிய செல்வம் சத்தியஜீவியத்திற்கு முன்னுரையாக வரும்.

அன்பர்களாகிய நாம் அன்னை, பகவான், ஸ்ரீ கர்மயோகி அவர்களின் அருள் வேண்டி எந்த நல்ல செயலையும் திறமையையும் முறைமையையும் குறையாமல் விடாமுயற்சியுடன் செய்து, திரண்ட பெரிய செல்வம் பெற்று, சத்தியஜீவியப் பேறு பெற சிரம் தாழ்த்தி வணங்கி வேண்டுவோம். நிச்சயம் சத்தியம் பலிக்கும்.

அன்பர்கள் அனைவரும் திரண்ட பெரிய செல்வம் பெற்று சத்திய ஜீவிய பேறுபெற முடிவாக, 'என்னால் முடியாது, என்னால் எப்படி முடியும்? என்னை உங்களிடம் ஒப்படைத்தேன். நான் செய்ய வேண்டியதை எனக்காக, என் சார்பாக நீங்கள் செய்ய வேண்டும்' — என்று அன்னையிடம் வணங்கி வேண்டிக் கொள்வோம்.

*முடிவுரை:*

எலிசபெத்தை முதலில் அழகற்றவள், பரவாயில்லை என்றவர் டார்சி. அதன் பின் அவள் கண்களிலுள்ள ஒளியால், ஒளியின் வசீகரத்தால் கவரப்பட்டு டார்சி, தன்னை எலிசபெத்திற்கும், அவள் குடும்பத்தினருக்கும் முழுவதுமாக அர்ப்பணித்தார்.

பிரதிபலனாக, அவர் சார்பில் பெம்பர்லி எலிசபெத்தின் கண்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் தன் பிரம்மாண்டத்-தையும், கம்பீரத்தையும், அழகையும் அவள் கண்களுக்கு விருந்தாக்கியது. கண்ட காட்சியின் உயர்வைக் கண்டு க்ஷண நேரத்தில் இந்த அரண்மனைக்கு எஜமானியாக இருந்திருக்கலாம்

என்று எலிசபெத் நினைத்து பல்வேறு திருப்பங்கள், குழப்பங்களுக்குப்பிறகு அவளை டார்சிக்கு திருமணம் செய்வித்து பெம்பர்லிக்கு எஜமானி ஆக்கியது.

இது பெம்பர்லி நடத்திய டார்சி எலிசபெத் திருமணம்.

திரண்ட பெரிய செல்வம் பெற்றார் எலிசபெத்.

எலிசபெத்திற்கு சத்திய ஜீவியமாக டார்சி வந்தார்.

## ஜீவிய மணி

தகுதியை அறிவது தரணியைப் பெறுவது. மடமையை விவேகமென நினைத்தாலும் தானுள்ள அளவில் உச்சியை எட்டலாம். அதற்கு மேலுள்ள அனைத்தும் வரவிருந்ததை அறியவும் முடியாது. உச்சியை எட்டியவன் பெற்றதை அறிவான். இழந்ததை அறிய மாட்டான்.

சுயநலம் பெருவெற்றி பெறுவது, பரநலம் படுதோல்வியடைவது. சுயநலமாக ஊரை (உலகை) ஆள்பவன், பரநலமாக உலகை (வானுலகை) ஆளும் வாய்ப்பு வந்ததை அறியான். பரநலத்தை ஏற்க முடியாமல் MLA, MP ஆக மறுத்து, சுயநலமாக பஞ்சாயத்து தலைவராவது மனிதன். சுயநலத்தை விடமுடியாமல் சுதந்தரத்தை இழந்தான் பிடியை விடமுடியாமல் பிதிர்ராஜ்யத்தை இழந்தவன்.

Published by Mr. P.V. Sankar on behalf of The Mother's Service Society, No. 5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011, Printed by Mr. S. Devanathan at Sakthi Offset Printers, No. 238, Lawspet Main Road, Pakkamudayanpet, Puducherry - 605008, Published from Flat No. 11, 2nd Floor, Grace Apartments, No. 177, Papammal Koil Street, Vaithikuppam, Puducherry - 605012, Editor: Mr. N. Asokan, Secretary, The Mother's Service Society, No. 5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011.

# மௌனத்தின் கர்ஜனை

(Eloquent Silence)

மௌனம் பேசும், ரீங்காரம் செய்யும், கர்ஜிக்கும், உலகை ஓம் மூலம் சிருஷ்டித்த மௌனம் எதையும் செய்யும். காணாமற்போன பொருள்களை நமக்குத் தரும் அன்னை 1) நாமறியும் வழிகளிலும், 2) நாம் இதுவரை அறியாத வழிகளிலும், 3) உலகில் உள்ள உலகம் அறியாத முறைகள் மூலமாகவும், 4) உலகிலில்லாத ஒரு முறை வழியாகவும் தருகிறார். அன்பன் பக்தி சூட்சுமமாக, ஆழமாக இருந்தால் அது சத்திய ஜீவிய எல்லையில் விளையாடுவதானால் காணாமற்போன பொருளை அன்னை சூட்சும உலகில் மீண்டும் உற்பத்தி செய்து காரண லோகம் (casual world, supramental world) கண்ணுக்கு நேரே கொண்டு வருகிறார். இதை அன்பன் அறிந்த நேரம் சாதகனாகி, யோகியாகி முதல் அடிப்படையான சித்தியைப் பெறுவான். இந்திய சுதந்தரம் 1947-இல் பாகிஸ்தானில்லாமலும், 1942-இல் முழு இந்தியாவாகவும், 1935-இல் ஜனநாயக நாடாகவும், 1920-இல் ஜாலியன் வாலாபாக் தவிர்க்கப்பட்டும், 1915-இல் சுதந்தர இயக்கத்தாலும் பெறும் வாய்ப்பு எழுந்தது.

- இன்று உலகம் ஆன்மீகத் தலைமையை ஏற்க விரும்புகிறது.
- உலக சர்க்கார் சூட்சுமத்தில் ஏற்பட்டு விட்டது.

# தொழிலின் ஜீவன்

எலக்ஷனில் ஏராளமான வேலை செய்ய வேண்டும். ஓட்டிற்குப் பணம் தர வேண்டும். செலவு பெரியது என வந்த வேட்பாளரிடம் உள்ளூர் பிரமுகர் அவர் ஜாதி தொகுதியில் உள்ளவர் ஜாதி என அறிந்து “எந்த வேலையும் செய்ய வேண்டாம், செலவுக்கே வேலையில்லை. அனைவரும் உங்களுக்கே ஓட்டு போடுவோம்” என்பது ஜாதியின் மகிமையைக் காட்டுகிறது. தொழிலில் கம்பெனி உண்டு, சிப்பந்திகளுண்டு, தொழிலாளி உண்டு. மார்க்கெட் உண்டு, மெஷின் உண்டு. கம்பெனிக்கு ஜீவனுண்டு. மானேஜருக்கு ஜீவன் உண்டு. தொழிலாளருக்கு ஜீவனுண்டு, மார்க்கெட்டிற்கு ஜீவனுண்டு. முதலாளி தன் ஜீவனில் இந்த ஜீவன்களை ஏற்றால் மார்க்கெட் முதல் தரும், பெரும் இலாபம் தரும். ஜீவனைக் கண்டு, ஜீவனைப் பாராட்டி, ஜீவனை ஏற்று, ஜீவனுக்கு ஜீவியம் தருவது ஜீவனுள்ள தொழில்.

- “தொழிலின் ஜீவன்” என்ற சிறுநூல் இதை எப்படிச் செய்வது எனக் கூறுகிறது.
- சிறு முதலுடன் பெரும் இலாபம் சம்பாத்தித்தவர் வரலாறு இது.
- முதலேயில்லாமல் ஜீவனால் முதலுக்கு ஜீவன் கொடுப்பதை இன்று இந்திய மார்க்கெட் செய்வதை அனைவரும் அறியார்.
- மார்க்கெட்டுடன் ஜீவனோடு தொடர்பு கொள்ள அன்னை நினைவு அனுதினமும் வேண்டும்.